குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 48 | சுக்கில ஆண்டு ஐப்பசித்திங்கள் 10–11–89 [இதழ் 12

திருக்கயிலாய பரம்பரைத்
தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம்



கார்த்திகைச் சோமவார நாட்களில்

1008 சங்காபிஷேகம் கொண்டருளும்

ஸ்ரீ அமிர்தகடேசுவரர்

தருமையாதீனம் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ
குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

ஈசன் றனதுசத்தி
யின்பருந்து மீசனுல்
ஆசறத்தன் சத்தியிலின்
பான்மாவும் — நேச
முடனருந்து மென்னின்முத்தி
யெசவ்வாது பாசம்
விடஅதுவாய் நிற்பதுவா மே.

— முத்திநிச்சயம் 4

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 48 | 10–11–89 | இதழ் 12

உட்பொருள்

எண் — பக்கம்

1 தேர்தல் சிந்தனையும், பிரார்த்தனையும் ... 601
2 தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ... 606
3 பார்வையாளர் குறிப்பு 616
4 இலிங்கபுராணத்தேவர் 617
5 மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள் ... 622
6 போதமும் சித்தியும் ... 625
7 மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் ... 628
8 சத்தியார், ஐயடிகள்காடவர்கோன் 634
9 செய்திகள் ... 640
10 எதிர்காலம் ... 645
11 இதழ்வழிச் சைவசமயக் கல்வி V. பாடம்-9 ... 649
12 "ஞானசம்பந்தம்" 48 ஆம் ஆண்டு மலர்ப் பொருளடக்கம் ... I-IV

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 48 ★ இதழ் 12

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

சுக்கில - ஐப்பசி - 10—11—1989

பொன்தயங் கிலங்கொளிந் தலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடல்ஆல வாயிலாய்!
நின்தயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

தேர்தல் சிந்தனையும், பிரார்த்தனையும்

தேர்தல் திருவிழா !

தேர்தல் கமிஷன் ஒன்பதாவது பொதுத் தேர்தலுக்கு நாள் குறித்துவிட்டது. அரசியல் கட்சிகள் வரிந்துகட்டிக்கொண்டு தேர்தல் களத்தில் குதித்துவிட்டன. நாங்கள் ஆட்சிக்குவந்தால் என்ன சாதிப்போம் என்று, அவை, நாளும் தேர்தல் அறிக்கைகளை விட்டுக்கொண்டுள்ளன. தேசியக் கட்சிகளும், பிராந்தியக் கட்சிகளும் தேர்தல்கால உறவுகொண்டு, கூட்டணி அமைத்துக் குதூகலமாக இயங்குகின்றன. தேர்தல் திருவிழாவில் பங்கேற்கும் புதிய வாய்ப்புக் கிடைத்த மகிழ்வில், பதினெட்டு வயது நிறைந்த பலகோடி புதிய இளைஞர்கள் தேர்தல் நாளை விருப்போடு எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர். எட்டு முறை வாக்களித்தும்

என்ன கண்டோம் என்ற ஏக்கத்தோடு, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் கோடானு கோடி வாக்காளர்கள், வழக்கமான வாழ்க்கைப் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு ஏனோ, தானோ என்று வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். வீரசுதந்திரம் பெற்று நாற்பத்தி இரண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

ஏக்கப் பெருமூச்சு !

ஐம்பத்தாறு தேசங்களாய்ச் சிதறிக்கிடந்த பாரதத்தை ஒரே நாடாக 'இந்தியா' என்ற பெயரில் உருவாக்கினர் வெள்ளையர்கள். கல்வியும், வாழ்க்கை வசதிகளும் அவர்களால் வழங்கப் பெற்றன. என்றாலும், அடிமை விலங்கொடிக்கக் காந்தியடிகள் தலைமையில் நாடு விறுகொண்டு எழுந்தது. கத்தியின்றி, ரத்தமின்றி யுத்தம் ஒன்று நிகழ்த்தினோம். விடுதலைபெற்றால் அறியாமை அகலும்; வறுமை ஒழியும்; உணர்வு பூர்வமான ஒரு நாடு என்ற உறவு வளரும்; உழவும் தொழிலும் ஓங்கும். உலக அரங்கில் இந்தியா உறுதியோடு தலைநிமிரும் என்று காந்தியடிகளும், மகாதேவ கோவிந்த ரானடே போன்ற விடுதலை விரும்பிகளும் நம்பினர். புதிய அரசியல் சட்டம்செய்து மதச்சார்பற்றஇந்தியாவை உருவாக்க நினைத்தோம்! விடுதலை கிடைத்தது! எல்லாரும் இந்நாட்டு மன்னரானோம்! எல்லார்க்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கினோம்! எட்டுமுறை தேர்தல் வைத்தோம் : எதிர்பார்த்த பலன்கள் விளைந்தனவா ? ஏக்கப் பெருமூச்சே விடையாக வெளிவருகிறது! ஏன் இந்த நிலை ?

ஒருகணம் சிந்திப்போம் !

விடுதலைபெற்ற முதல் இருபது ஆண்டுகளில், திட்டமிட்ட பாதையில் நடையிட்டது பாரதம். தேசியநீரோட்டம் திக்கெட்டும் பரவியது. ஆந்திராவில் ஓடும் கிருஷ்ணாநதிநீர் தமிழ்நாட்டுப் பெண்ணையாற்றில் ஓடத் திட்டம் தீட்டப்பெற்றது. பிராந்தியக் கட்சி ஆட்சியால் இத்தேசிய நீரோட்டம் தடைப்பட்டது. காவிரி ஒப்பந்தம் பதினைந்தாண்டுகளாகியும் புதுப்பிக்கப்படாமல் தடைப்பட்டு நிற்கிறது. இன்று திசைதெரியாத பயணத்தை மேற்கொண்டு தவிக்கிறது. தேசியம், ஒருமைப்பாடு, தியாகம், நாட்டுப் பற்று, சகிப்புத்தன்மை என்ற சொற்கள் தத்தம் அர்த்தங்களை இழந்துவருகின்றன. புதியவறுமைக்கோடு ஒன்றைப் பூகோளத்தில் வரைந்தோம். ஏமாற்றுவோர், ஏமாற்றப்படுவோர் என இரு அணிகளாக நாடு பிரிந்துபோய்க்கிடக்கின்றது. மதம், இனம்,

மொழி, ஜாதி என்ற பெயரால் தெருச்சண்டைகள் தாராளமாக நாட்டில் நடக்க அனுமதித்தோம். ஒன்று, இரண்டு, நான்கு எனப் பெருகி இன்று இருநூறு கட்சி கண்டோம். கொடி நட்டோம்; கோஷம் போட்டோம்; நாடு வளர்ந்ததா? நாம் வாழ்வு பெற்றோமா? வறுமை தொலைந்ததா? வருங்காலம் நம்பிக்கை தருமா? வாக்குச் சாவடிக்குப் போகுமுன் ஒருகணம் சிந்திப்போம்!

யார் நல்லவர்?

யார் நல்லவர்கள்? யார் கெட்டவர்கள்? தூய்மையான கட்சி எது? ஊழல் கட்சி எது? நேர்மை யாரிடம் உண்டு? இல்லாதவர் யார்? எந்த அணி நேர்மையான ஆட்சி நல்கும்? எது நாட்டைச் சீர்குலைக்கும் என்று வேறு பிரித்து அறியத்தக்க நிலை இன்று இல்லை! பொறுப்பற்ற பேச்சு! பொறுப்பற்ற செயல்! குடுமிப்பிடி சண்டைகள்! திட்டமிட்டே உதாசினப்படுத்துவது! நேர்மையை விலைபேசி விற்பது என்பவற்றில் யாருக்கு யாரும் சளைத்தவர்கள் அல்லர் என்ற நிலையே காணப்படுகிறது. நேற்றுப் பகைத்தவர்கள் இன்று ஒரே அணியில்! இங்கிருந்தவர்கள் அங்கே! ஒரே தலைவர்! நான்கு அணிகள்! தனி மனித வழிபாடு! கவர்ச்சி அரசியல்! பண பலத் தேர்தல்கள்! இன்றல்ல நாளை! நாளை இன்றேல், நாளை மறுநாள்! என்றோ ஒருநாள் நாடு பகை மறந்து ஒன்றுபட்டு, வளமோடு முன்னேறும் என்று நம்பியவர்கள் நம்பிக்கை சீர் குலைந்ததே தவிர, நாடுமகிழத்தக்க வகையில் முன்னேறக்காணோம்! ஆனால், தேர்தல் மட்டும் தவறாமல் வந்து வந்துபோகிறது.

மத்திய மாநில உறவு :

பலமொழி, பலஇனமக்கள் வாழும்நாட்டில், மாநில ஆட்சியும், மத்திய ஆட்சியும் இணைந்து செயல்படுவது இன்றியமையாதது. அரசியல்சட்டம் அமைத்து, மாநில–மத்திய அரசுகளின் அதிகாரங்களுக்கு வரம்பு அமைத்தோம். விடுதலை பெற்ற தொடக்க காலங்களில் மத்தியிலும், மாநிலங்களிலும் ஒரே கட்சி ஆண்டபோது நிலவிய உறவும், அதனால் விளைந்த பலனும் நிறைவாகவே அமைந்தன. காலப்போக்கில் மத்தியிலும், மாநிலங்களிலும் வேறு வேறு கட்சிகள் ஆட்சி ஏற்றன. ஜனநாயகத்தில் இவை எதிர் பார்க்கத்தக்கனவே. ஆனால், இவற்றின் விளைவு மாநிலவளர்ச்சிக்கு உகந்ததாக இல்லாது போயிற்று. மாநில அரசுகள், மத்திய அரசுடன் இணக்கம் காட்டாமல் மோதல் போக்கை மேற் கொண்டன. மத்திய அரசோ, கட்சிக்கண்ணோட்டத்தில், மாநிலந்

தாய் மனப்பான்மையோடு நடந்து கொண்டது. இவற்றின் விளைவால், மத்திய, மாநில அரசின் செயற்பாடுகள் தடைப் பட்டன. பலன்? மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பயன்கள் கிடைக்காமல்போயின. காவிரிநீர்ப் பிரச்சனை! தெலுங்குகங்கைத் திட்டம்! இவற்றின் தேக்கத்திற்கான உண்மைக்காரணம், மத்திய மாநில உறவில் விளைந்த சிக்கல்களே என்பது தெளிவு. கணவன் - மனைவி உறவுபோல் இருக்கவேண்டிய மத்திய மாநில அரசுகள், பங்காளிகளாய்ப் பகைத்துக் கிடக்கின்றன. கட்சிகள்பலவாயினும், அவற்றுள் கருத்து வேறுபாடுகள் பலவாயினும், அவை, 'நாட்டு வளர்ச்சிக்கும், மாநில வளர்ச்சிக்கும் எந்த வகையிலும் இடர் விளைக்காது' என்று பிரதிக்ஞை எடுத்துக் கொண்டு அதைக் காக்கவேண்டும். அந்நல்லுணர்வைத் தலைவர்கட்கு மக்கள்தான் உணர்த்தவேண்டும்.

மக்களுக்குத் தண்டனை !

இந்நிலை வராவிடில், தங்களுக்குள் முரண்பட்ட இவ்வரசுகள், கடைசியில் மக்களைத் தண்டிக்கின்றன! இது ஒருபுறம்! இன்னொரு புறம், மக்களுக்குத் திட்டமிட்டு வாழ்வு தர இயலாத இவை, குறுக்குவழிகளைக் கையாண்டு, வாக்குறுதிகளையும், அன்பளிப்புக் களையும் வழங்கி மக்களிடம் வாக்குப்பெற முயல்கின்றன. இலவச மாக ஏழைக்குழந்தைகளுக்குச் சோறுபோடுதல். வேட்டி, புடவை வழங்குதல், அன்பளிப்புக்கள் வழங்குதல் என்று நாடு முழுவதும் இவை நடைபெறுகின்றன. 'உன் குழந்தைக்கு மீன் பிடித்துக் கொடுக்காதே! மீன் பிடிக்கக் கற்றுக்கொடு' என்கிறது ஒரு சீனப் பழமொழி. தன் மக்களுக்குக் கல்வி, வேலை வாய்ப்பு இவற்றை வழங்குவதன் மூலம், அவர்களே தம் தேவைகளை நிறைவு செய்து கொள்ள உதவுவதே உண்மையான அரசின் செயற்பாடாகும். கடவுளும் மனிதனுக்குக் கை, கால் முதலிய தொழிற் கருவி களையும், கண், காது முதலிய அறிவுக்கருவிகளையும், செயல்படுத்த வினை நிலங்களையும் கொடுத்து உழைத்துப் பிழைக்க வழி செய்துள்ளாரேயன்றி, சும்மா சோறு போட்டு வளர்க்கும் நிலையில் உலகத்தைப் படைக்கவில்லை என்பதை ஒவ்வொருவரும் நினைவில் கொள்ளவேண்டும். எல்லாம் இலவசமாகக் கிடைக்கும் என்றால், மக்கள் உழைப்பைப் போற்றமாட்டார்கள். நலத்திட்ட முதலீடு களுக்குச் செல்லவேண்டிய மக்களின் வரிப்பணம், அரசியல்கட்சி களின் ஓட்டு வாங்கும் முயற்சிகளுக்கு இலவசமாக விநியோகிக்கப் படுவது வேதனை தருகிறது. ஏழைகளை நிரந்தர ஏழைகளாகவே வைத்திருப்பதோ, ஜனநாயகத்தில், அறிவு பூர்வமாக அவிக்கப்

பெறவேண்டிய வாக்குகளை, ஆசைகாட்டிப் பெறுவதோ, உண்மையான வளர்ச்சிக்கு ஒருபோதும் உதவாது. இவை, எல்லா அரசியல் கட்சிகளும் ஏற்கும் ஒழுக்கநெறியாகிவிட்ட காலத்தில், நாம் ஒன்பதாவது பொதுத் தேர்தலைச் சந்திக்கின்றோம்.

யாருக்கு வாக்கு :

யாருக்கு வாக்களிப்பது? என்ன சொல்வதென்றே தெரியவில்லை! யாருக்கு, யார், எவ்வாறு அறிவுரை கூறுவது? அதுவும் புலப்படவில்லை! இன்று நிலவும் அரசியல், மற்றும் ஆட்சி முறை, மக்களுக்கோ, நாட்டுக்கோ, ஜனநாயகத்திற்கோ உகந்ததாக இல்லை என்பதுமட்டும் உறுதியாகத் தெரிகிறது. யார் சொல்லியும் யாரும் கேட்கப்போவதும் இல்லை; அறிகுறிகளும் தென்படவில்லை; செய்வது அறியாது திகைக்கும் நிலையில் தெய்வத்தையே துணைக்கு அழைக்கவேண்டும். அவர்தான் மக்கள் உள்ளத்தில் புகுந்து நின்று தக்கவர்கட்கு, தக்க கட்சிக்கு வாக்களிக்கச் செய்யவேண்டும். வாக்குப் பெறுவோர் உள்ளத்திலும், வாக்குப் பெறும் கட்சிகளின் கருத்திலும் புகுந்து இனியாகிலும் நல்லாட்சி மலர அருள் செய்ய வேண்டும். நாடு வளர, நாட்டில் நன்மக்கள் வளர, நன்மழை பொழிய, நல்வளம் பெருகத் துணை செய்யவேண்டும்.

பிரார்த்தனை செய்வோம் :

இறைவா! எம் மக்களை வாழவைப்பாயாக! அவர்களுக்கு நல்லறிவை வழங்குவாயாக! அரசியல்மற்றும் ஆட்சிப்பொறுப்பில் நேர்மையையும், நாணயத்தையும், தியாகத்தையும் மீண்டும் மலர்த்துவாயாக! அளவற்ற தெய்வபக்தி கொண்ட நாட்டை, மீண்டும் சிதறுண்டு போகாது பாதுகாப்பு வழங்குவாயாக! சமய-இன - மொழி - சாதி பேத வெறிகளைக் களைந்து ஒருமை உணர்வுடைய இந்தியப் பெருநாட்டை உருவாக்கத் துணைசெய்வாயாக! வேண்டுகோள் வீண் போவதில்லை! அனைவரும் வேண்டுவோம்! நல்லாட்சி வேண்டி வணங்குவோம்! நலம் பெற்று வாழ்வோம்.

வணங்குவது நம்கடமை; வளர்ப்பது அவன்கடமை!
வாழ்த்துவது நம்கடமை; வாழ்விப்பது அவன்கடமை!

வாழ்க இந்தியா ! வாழ்க உலகெலாம் !

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவாரூரில் நடைபெற்ற

ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசர் குருபூஜை விழாவில்

வழங்கியருளிய

ஆசியுரை

20—10—1989

"யார் அறிவார் நீதிவழி யார்அறிவார் சித்திமுத்தி
யார் அறிவார் நற்றவங்கள் அன்பனைத்தும் — பார்எவர்க்கும்
கத்தன் கமலையில் வாழ்ஞானப்ர காசன் என்னும்
அத்தன் என்போல் வந்திலன் ஆனால்"

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

கமலை ஞானப்பிரகாசர் குருபூஜை :

தருமை ஆதீன ஆதிகுருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். அவர்தம் குருநாதராக இறைவனால் உணர்த்தப் பெற்றவர் ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசர் ஆவர். இவர் வாழ்ந்த இத்திருவாரூர் தருமை ஆதீனத்தின் குருக்ஷேத்திரமாக விளங்குவது. கமலை ஞானப்பிரகாசரின் குருபூஜை விழா, ஐப்பசி மாதம் கிருஷ்ண பட்சத்தில்சஷ்டிதிதியில் வருகிறது. இவ்விழாவினை அக்குருநாதரின் குடும்பத்தினர் இங்கு நடத்திவந்தனர். மூன்றுஆண்டுகளாக நமது ஆதீனத்தின் சார்பிலேயே இவ்விழா இங்கு நடத்தப் பெற்று வருகிறது. தருமபுரத்தில் நானூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆதீனத்தின் குருபூஜை விழாவைக் கமலை ஞானப்பிரகாசரின் விழாவாகவும், மறுநாள் நிகழும் மாகேசுவர பூஜை விழாவினைக் குருஞானசம்பந்தர் விழாவாகவும் அமைத்துக் கொண்டாடி வருவது மரபாக உள்ளது.

இணைந்த பொருத்தம் :

இன்று, இங்கு இவ்விழாவில் ஸ்ரீ வன்மீகநாதருக்கும் ஸ்ரீ நீலோத்பலாம்பிகை,சித்திச்சரம் ஸ்ரீமேதாதட்சிணாமூர்த்திக்கும் சிறப்பாக அபிடேக ஆராதனைகள் நடந்ததோடு ஸ்ரீ தியாகராஜப் பெருமானுக்கு முசுகுந்தார்ச்சனையும் அடியார்கட்கு மாகேசுவர பூஜையும் சிறப்பாக நடைபெற்றன

இப்புனித நன்னாளில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றமும் இறையருளால் துவங்கப் பெற்றுள்ளது. கமலை ஞானப்பிரகாசர் குருபூஜைவிழாவில் இப்பணிமன்றம் துவங்குவதில் ஒருபொருத்தம் உள்ளது. இறைவன், சும்மாஇருந்தே உலகனைத்தையும் தன்சந்நிதி மாத்திரையில் தன் சக்தியைக் கொண்டு இயங்கச் செய்வர். அதுபோல் கமலை ஞானப்பிரகாசர் இங்கு இறைவனைப் போன்று இருந்தபடி இருந்தருள, அவரின் அருளைப்பெற்ற சீடர் குருஞான சம்பந்தர்,சந்நிதியிலிருந்து மக்களைச்சமய சமுதாயப்பணிகளில் இயக்கப் போகிறார். இத்தத்துவத்தை விளக்கவே இக்குருக்ஷேத்திரத்தில் இக்குருபூசை விழாவில் குருஞானசம்பந்தர் பணிமன்றம் திருவருள் பொருத்தமாகத் தொடங்கியிருக்கிறது.

சமயப்பணியும், சமூகப்பணியும் :

இந்தப் பணிமன்றம் சமயப்பணியையும், சமூகப்பணியையும் இருகண்கள் எனக் கொண்டு பணிபுரிதல் வேண்டும். பிறர் பார்வைக்குக் கண்கள் இரண்டும், இரண்டு உறுப்புக்களாகத் தெரியினும், இரண்டுகண்களும் ஒரேபொருளைக் காண்பது போல, இவ்விரு பணிகளையும் ஒன்றாகவே நோக்க வேண்டும். சமயப்பணி என்பது, இறைவழிபாடு செய்தல்; சமூகப்பணி என்பது, தன்னைச் சுற்றிவாழும் உயிர்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்து நெறிப்படுத்துதல். சிலர், மக்களுக்குச் செய்யும் பணியே சமூகப்பணி என்று எண்ணுகின்றனர். அது சரியன்று. எல்லா உயிர்களுக்கும் உதவுவதே சரியான சமூகப்பணி ஆகும்.

அனைத்து உயிர்களுக்கும் உதவ வேண்டும் என்னும் உணர்வு, ஒருவனுக்கு இறைவனை நாளும் உண்மையாக வழிபடும்பொழுதும் அதன் வழி அவன் அருளைப் பெற முயலும் பொழுதும் தான் தோன்றும். எனவே சமயப் பணியின்றிச் சமூகப்பணி தோன்றாது; அங்ஙனம் தோன்றியுள்ளதெனின் அது போலியாகவே இருக்கும். இக்கருத்தினைச் சிவஞான சித்தியார்,

" ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார்
எவ்வுயிருக்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார் "

என்று கூறுகிறது. எனவே ஈசனிடத்து உண்மை அன்புடையோரே எல்லா உயிர்களிடத்தும் மெய்யன்புடையோராயிருப்பர் என்பது தெளிவாகிறது. இறைபக்தி கொண்டோர் மேற்கொள்ளும் சமூகப் பணிதான், உண்மையானது; உறுதியானது; எதிர்பார்ப்புஇன்றிச் செய்யப் பெறும் பரந்த நோக்குடையது. எனவே மக்கள் அனை வரும் செய்ய வேண்டிய பணி, முதற்கண் சமயப் பணியேயாகும். இதனால்தான், ஒரு தொடர், மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

மகேசன் பணியில் மக்கட்பணி :

"மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்பதே அது. இதற்குப் பொருள், மக்கள் செய்ய வேண்டிய தொண்டே மகேசனுக்குச் செய்ய வேண்டிய தொண்டுதான் என்கிறது. இவ்வண்ணம் பொருள் காணும் பொழுது எந்த ஒரு உருபினையும் சேர்க்காமல் இருந்தபடியே பொருள் கூறமுடிகிறது. இங்ஙனம் இன்றி, மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டு என்றுபொருள் காணும்பொழுது நான்காம் வேற்றுமை உருபினைக்கூட்டிப்பொருள் கூறவேண்டியுள்ளது. இத்தொடருக்கு அங்ஙனம் உருபினை விரித்துப் பொருள் கூறுகின்றவர்கள், மக்கட்குச் செய்யும் தொண்டே என்னுமிடத்து உருபு விரிக்காமல் மகேசனுக்குச் செய்யும் தொண்டுஎன்று உருபு விரித்துப் பொருள் கூறிவிட்டால், ஏழைகளுக்கும் இன்னுயிர்களுக்கும் மக்கள் தொண்டு உதவாமல் போய்விடும் நிலை ஏற்பட்டுவிடும். உண்மை யில் ஏழைகளுக்கும் இன்னுயிர்களுக்கும் உதவும் மனஉணர்வு எப்பொழுது ஏற்படும் எனில், இறைவனை மெய்ம்மையாக வழிபட்டு வரும் பொழுதுதான் ஏற்படும் என்பது அனுப சாத்திய மாகும். அதனால்தான், நம் முன்னோர்கள் வழிபாடு செய்யும் பொழுது நமக்கு ஏற்படும் புண்ணியத்தினை மூன்று வகையாகப் பிரித்துக் கூறினர். இறைவனுக்குச் செய்யும் வழிபாட்டால் கிடைக்கும் புண்ணியம் பதிபுண்ணியம் என்றும், உற்றார் உறவினர் களுக்குச் செய்யும் உதவியினால் கிடைக்கும் புண்ணியம் பாச புண்ணியம் என்றும், பிற உயிர்களுக்குச் செய்யும் உபகாரத்தால் கிடைக்கும் புண்ணியம் பசு புண்ணியம் என்றும் கூறினர்.

வேரிலே நீர் ஊற்றுக :

இத்தகைய பொதுநல உணர்வுகள் மேலோங்க வேண்டுமே யானால் முதற்கண் வேண்டுவது இறைபக்தியே. இறைபக்தி என்பது வேரில் நீர் ஊற்றுவது போன்றது. அங்கு நீர் ஊற்றினால்

அதன் பயன் கிளை, இலை, காய், கனிகளுக்குச் சென்று சேரும். அதுபோல இறைபக்தியை மேற்கொள்ள மேற்கொள்ள அதன் வளர்ச்சியில் உற்றார், உறவினர், உயிர்கள் மீதும் நாட்டின் மீதும் அன்பும் கருணையும் பிறக்கும். எனவே இறைபக்தியாகிய வேரில் நீர் ஊற்றாமல் சமூகப்பணியாகிய இலை, கிளை, காய், கனி ஆகியன தவிர்த்து வருவதை எதிர்பார்ப்பதும், உள்ளீடின்றிப் புறநிலையில் பூஜை செய்து பயன் எதிர்பார்ப்பதும் பொய்யாகிப் போய்விடும். இக்கருத்தைத்தான் ஆதீன குருமுதல்வர் அழுத்தமாக,

“ நீரிலே மூழ்கிலும் என்? நித்தம் அருச்சிக்கிலும் என்?
பாரிலே சுற்றிப் பணியிலும் என்? — வேரிலே
உற்றிருந் தாலன்றோ உயிர்க்குறுதி ஒன்றிரண்டும்
அற்றவனே சொக்கநா தா ”

என்னும் பாடலில் கூறுகிறார். எனவே சமய உணர்வு மேலோங்க மேலோங்கச் சமூக உணர்வு தானே வந்து படியும்; பயன் தரும் என்பது ஒருதலை. அதனால்தான் முன்னே வாழ்ந்த அருளாளர்கள் அனைவரும் இறைவழிபாட்டில் ஒன்றியிருந்த அதே சமயம் உயிர்களுக்கு ஊறு நேர்ந்த பொழுது துயர்துடைக்க முந்திச் சென்று பணிபுரிந்துள்ளனர். இது பற்றியன்றோ திருவள்ளுவரும்,

“ அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொ ழுகலான் ”

என்றருளிப் போந்தார் என்க.

மக்கள் கடனும், மகேசன் கடனும் :

‘மக்கள் தொண்டே மகேசன்தொண்டு’ என்னும் தொடருக்கு வேறொரு வகையான நற்பொருளும் தோன்றுகிறது. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்றும், மகேசன் தொண்டே மக்கள்தொண்டு என்றும், சொற்களைமாற்றி அமைத்தும் பொருள் காணலாம். இறைவனின்பணி, மன்னுயிர்களை ஈடேற்றம் செய்வது என்றும், மன்னுயிர்களின் பணி தம்மை ஈடேற்றம் செய்யும் மகேசனுக்குப் பணிசெய்வதே என்றும் இத்தொடருக்குப்பொருள் காணலாம். இக்கருத்தில் அப்பர் சுவாமிகள்,

“ தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே ”

என்று கூறுமாற்றாலும் உணரலாம். எனவே இப்பணிமன்றத்தினர் சமயப்பணியும், சமூகப்பணியும் ஒன்றோடு ஒன்று இயைபு பட்டது என்றுணர்ந்து செயல்புரிவார்களாக!

வழிபாடு - சொல் விளக்கம் :

சமயப்பணி என்பது, இறைவழிபாடு என்பதோடு சமுதாயப் பணியாவதையும் கண்டோம். இனி இவ்வழிபாடு குறித்துச் சிந்திக்கலாம். வழி என்பது நெறி என்னும் பொருளைத் தருவது. படு என்பது செல்லுதல், பொருந்துதல் என்னும் பொருள்களை யுடையது. ஞானிகளும், அறிஞர்களும் காட்டியுள்ள நெறியில் பொருந்திச் செல்! என்னும் பொருளை வழிபடு என்னும் சொல் தருகிறது. 'வழிபடு' என்னும் சொல் இலக்கணப்படி ஏவல் வினை முற்றாக உள்ளது. 'வழிபடுதல்' என்பது தொழிற்பெயர். இது பெயர்ச் சொல்லாக மாறும் பொழுது ஈற்றயல் நீண்டு 'வழிபாடு' என்றாகிறது. பண்படு என்பது பண்பாடு எனஆவதுபோல் இதனைக் கொள்ளலாம்.

நெறியும் நெருஞ்சிலும் :

அருளாளர்கள் காட்டிய நன்னெறியில் சென்றால் நலம் விளையும்; அஃதன்றி வழிதவறிச் சென்றால் துன்பம் சேரும். இதனை நன்குணர்ந்த முன்னோர்கள் நல்லோர் வழியில் செல் என்று ஏவலாகக்கூறினர். ஆக, நல்வழியும் நல்லது அல்லாத அல்வழியும் உலகில் உண்டு; இவற்றை உணர்ந்து நீ நலம் பெறுதற்பொருட்டு நல்வழியில் செல்க - அதாவது இறைவனை வழிபடுக என்று வற்புறுத்தினர். இக்கருத்தைத் திருமூலர் எளிய உவமையில் வைத்துச் சிறப்புற விளக்கியுள்ளார். இறைவன், நெறியும் படைத்தான்; நெருஞ்சிலும் படைத்தான். பயணம் செல்வோர் நெறியில் காலூன்றிச் சென்றால் நெருஞ்சில் முள் தையாது. நெறிதவறிக் கால் வைத்தால் நெருஞ்சில்முள் தைக்கும். அதுபோல் முன்னோர்கள் காட்டிய ஞானவழி தவறி நடந்தால் துன்புறுவர். நன்னெறியில் சென்றால் துன்பம் நேராது, இன்புற்றிருக்கலாம். இக்கருத்தினைத் திருமூலர்,

> "நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்
> நெறியில் வழுவின் நெருஞ்சில் முள்பாயும்
> நெறியில் வழுவா தியங்க வல்லார்க்கு
> நெறியின் நெருஞ்சில் முள் பாயகிலாவே"

என்னும் பாடலில் இனிதே விளக்குகின்றார்.

மூவகை வழிபாடு :

வழிபாடு என்பது மூன்று வகைப்படும். ஒன்று: எல்லா வற்றிற்கும் முதலாகவும் முடிவாகவும் விளங்கும் இறைவனை

வழிபடுவது. இது சிவவழிபாடு ஆகும். இரண்டு : அவ்விறைவனை வழிபடும் நெறிமை அறிவுறுத்தும் ஆசிரியர்களைப் போற்றுவது. இது குருவழிபாடு ஆகும். மூன்று : இத்தகைய வழிபாட்டின் பயன்கள் என்றும் நிலைத்து நிற்றல் வேண்டி அடியார்களைவணங்கு வதுடன் அவர்களுடன் உறைவது. இது சங்கம வழிபாடு ஆகும், இதனைக் குரு லிங்க சங்கம வழிபாடு என்பர்.

வழிபாட்டின் பயன் யாருக்கு ?

இவ்வழிபாடுகளைமேற்கொள்வதனுல் பயன். இறைவனுக்கோ குருநாதருக்கோ அடியார்களுக்கோ இல்லை. வழிபாடு செய்வோ ருக்குத்தான் பயன் வருகிறது. உதாரணமாகச் சொல்லப்போனுல் இளைஞன்ஒருவன், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மேல்அலுவலர்கள் ஆகியோரிடத்துப் பணிவும் இன்முகமும் கொண்டு ,சினத்தைத் தவிர்த்துக் கீழ்ப்படிந்து நடந்து கொண்டால் (வழிபட்டால்) அதனுல் ஆகும்பயன், அந்த இளைஞனுக்கே தவிர அவர்களுக்கு இல்லை அதுபோலவே இவ்வழிபாடுகளை மேற்கொள்வோர் இதனுல் ஏற்படும் பயன்களை வழிபாடு செய்யும் அவர்களே பெறுகிறூர்கள். இதனை எளிய உவமையில் வைத்துப் பட்டினத்தார் கூறுகின்றூர். பொன்னுல்பயன் பொன்னை அணிந்து கொள்வோருக் குண்டு. ஆனுல் அந்தப்பொன்னுக்கு அவரால் ஏதும்பயனுண்டோ? அதுபோல, இறைவா! உன்னுல் எனக்குப் பயன் உண்டு; ஆனுல் உனைப்பணியும் என்னுல் உனக்கு ஏதுபயன்? என்று கேட்கிறூர்.

" பொன்னுல் பிரயோசனம் பொன்படைத்தார்க்குண்டு [பொன்படைத்தோன்
தன்னுல் பிரயோசனம் பொன்னுக்கு அங்கேதுண்டு [அத்தன்மையைப்போல்
உன்னுல் பிரயோசனம் வேணது எல்லாம் உண்டு [உனைப்பணியும்
என்னுல் பிரயோசனம் ஏதுண்டு காளத்தி ஈச்சுரனே "

என்பது அப்பாடல்.

இவ்வழிபாட்டால் தாம் வாழ்வது மட்டுமின்றித் தம்மைப் பிறரெல்லாம் ஏத்தித் தொழுதலுக்காகவும் தேவர்கள்இறைவனை வழிபடுகிறூர்கள் என்று மாணிக்கவாசகர் அருளுகின்றூர்.

" வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனம் நின்பால்
தாழ்த்துவதும் தாம் உயர்ந்து தம்மை எல்லாம் [தொழவேண்டி "

என்பது அவர்வாக்கு. இக்கருத்திலேயே அப்பர் சுவாமிகளும்

"தொழப்படும் தேவர் தொழப்படுவானைத் தொழுத பின்னைத்
தொழப்படும் தேவர் தம்மால் தொழுவிக்கும்தன்
[தொண்டரையே"

என்றருளுகின்றார். எனவே வழிபாடு செய்வதனால் பலன், நல்ல வண்ணம் வாழ்தல் மட்டுமின்றி, மற்றவர்கள் தொழுதுவணங்கும் நிலைக்கு உயரவும் முடியும் என்பதை அனுபவ நூலாகிய திருமுறைகள் உணர்த்துகின்றன.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம் :

இத்தகைய சமய உணர்வையும் அதன்வழி சமூக உணர்வையும் மக்கள் மத்தியில் பரவச் செய்யும் நோக்கில் 10 ஆண்டுகளுக்கு முன்பு ஆதிகுருமுதல்வர் திருப்பெயரில் "ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம்" என்னும் அறக்கட்டளை ஒன்று தருமபுரத்தில் தொடங்கப் பெற்றது. தருமபுரத்தில் இப்பணிமன்றச் சார்பில் சமூகப்பணி என்னும் நிலையில் சிறுசுகாதார நிலயம் ஒன்றுநடந்து வருகின்றது. மயிலாடுதுறையில் ஒரு சிறுசுகாதார நிலையமும், மெட்ரிக்குலேஷன் பள்ளியும் மதுரை, திருநெல்வேலி, சுசீந்திரம் ஆகிய நகரங்களில் பாலர் பள்ளிகளும் நடைபெற்று வருகின்றன. சமயப்பணி என்னும்நிலையில் தருமபுரம், வைத்தீஸ்வரன்கோயில், சீகாழி, திருமுல்லைவாயில் ஆகிய ஊர்களில் வாரவழிபாட்டுக் கழகம் சிறப்பாக நடந்து வருகிறது. இனி இவ்வூரிலும் வார வழிபாட்டுக்கழகம் நடைபெறும். இதுபோன்று இன்னும்தமிழகத்தில் ஆதிகுருமுதல்வர் திருப்பெயரில் பணிமன்றம் தொடங்க விரும்புவோர், தலைமை இடமாகிய தருமபுரம் பணிமன்றத்துடன் தொடர்பு கொண்டு தொடங்கிப் பணி புரிந்து பயன் பெற முன் வரலாம்.

இனி இப்பணி மன்றம் செய்ய வேண்டிய பணிகள் பற்றிச் சிந்திப்போம்.

பணி மன்றப் பணிகள் :

(1) மன்றத்தினர் வாரத்தில் உகந்த - வாய்ப்பானஒருநாளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, அந்நாளில் தவறாமல் குறித்த நேரத்தில் திருக்கோயிலுக்குச் சென்று வழிபாடு நிகழ்த்தி வர வேண்டும். அங்ஙனம் வழிபாடு செய்யும் பொழுது அனைவரும் குறித்த நேரத்தில் வேறு எப்பணி இருப்பினும் அதனை ஒருமணி நேரம் ஒத்திவைத்துவிட்டுத் திருக்கோயிலுக்கு வந்து, கொடி மரத்தின் முன்னிலையில் அனைவருமாக - அட்டாங்க நமஸ்காரம்

ஆண்களும், பஞ்சாங்கநமஸ்காரம் பெண்களுமாகச் செய்து, பின் சிவபுராணம் ஒருவர் ஓதிவர, அனைவரும் சிவசிந்தனையுடன் தொடர்ந்து ஓதிக் கொண்டு வலம் வருதல் வேண்டும். பின்னர் விநாயகர், சுவாமி, அம்பாள், நடராஜர், முருகன், தெட்சிணுமூர்த்தி, சண்டிகேஸ்வரர் சந்நிதிகளில் ஒருவர் ஒவ்வொரு தோத்திரம்சொல்ல அனைவரும் உடன்சொல்லி வழிபாடாற்றுதல் வேண்டும். பின்னர் வெளிப் பிரகாரம் வந்து கொடிமரத்தின் பின் முன் போலவே நமஸ்காரம் செய்துவிட்டு ஓரிடத்தில் அமர்ந்திருக்க ஒருபுலவர் சமய சிந்தனை ஒன்றைச் சுருக்கமாகச் சொல்லல் வேண்டும். பின்னர் பிரசாதம்பெற்று அனைவரும் தமது இல்லம் ஏகுதல் வேண்டும். சமய சிந்தனை செய்யும் பொழுது, அதில், கோயில்அமைப்பு, தத்துவங்கள் பற்றியும், திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள திருமேனிகளின் தத்துவங்கள் - அதாவது திருமதில், கோபுரம், கொடிமரம், பலிபீடம், நந்தி, விநாயகர், முருகன், சிவம், அம்பாள், நடராஜர்,தெட்சிணுமூர்த்தி, சண்டிகேசுவரர், விமானம் ஆகியன குறித்த தெளிவான விளக்கங்கள் பற்றியும், சமயவாழ்வுடையோர் தெரிந்து கொள்ள வேண்டிய அடிப்படை நூல்களாகிய வேதம், ஆகமம் பற்றியும், தமிழ் நூல்களாகிய திருமுறைகள் பற்றியும், சைவசித்தாந்த தத்துவத்திற்கு வரப்பாக இலங்கும் மெய்கண்ட சித்தாந்தசாத்திரங்கள் பற்றியும் மகாசந்நிதானங்கள் திருவாய் மலர்ந்தருளிய பண்டார சாத்திரங்கள் பற்றியும் சிந்தனை செய்யலாம்.

(2) இங்ஙனம் வழிபாட்டு நெறியினைச் செய்வதோடன்றி, சிறு சுகாதாரநிலையம், பாலர்பள்ளி போன்ற சமூகப்பணிகளையும் மன்றங்கள் வாய்ப்புக்கு ஏற்ப — தேவைக்கு ஏற்பச் செய்யலாம். குடிப்பழக்கம், புகைப்பழக்கம், முதலிய தீய பழக்கமுடையோரை நாளாவட்டத்தில் சிறிது சிறிதாக அறவுரை கூறித்திருத்தலாம்.

பணிகளால் விளையும் பயன்கள் :

இத்தகைய பணிகளினுல் விளையும் நன்மைகள் குறித்து இனிச் சிந்திப்போம்.

இப்பணிகளை - வழிபாட்டினை நாளும் நியமமாகச் செய்து வந்தால், தீவினைகள் நீங்கி நல்லருள் சேர்ந்து இம்மையிலும் மறுமையிலும் நலம் விளையும் என்பது திண்ணம். இதைத்தான் திருஞானசம்பந்தர், திருத்தென்குரங்காடுதுறைப் பதிகத்தில்,

" பரவக் கெடும் வல்வினை................ "

என்றும் தென் திருமுல்லைவாயில் பதிகத்தில்,

" நெஞ்சார நீடு நினைவாரை மூடும் வினைதேய நின்ற நிமலன் "

என்றும் அருளுகிறார். திருமாகறல் பதிகத்தில், " விங்கு விளை கழனி " என்று தொடங்கும் திருப்பாசுரத்தில்,

" செங்கண் விடை அண்ணல் அடிசேர்பவர்கள்
தீவினைகள் தீரும் உடனே "

என்கின்றார்.

நாம் செய்த தீவினைகளும், நல்வினைகளும் அனுபவித்தால் அன்றி நீங்கா என்பது சாத்திரக் கருத்தாயிருக்க, இங்ஙனம் இறைவழிபாட்டால் நீங்கும் என்று எப்படிக் கூறமுடியும்? என்னும் கேள்வி எழும். இறைவழிபாட்டினை முறையாக-மெய்ம்மையாகச் செய்யச் செய்ய – உள்ளம் உருகி வேண்ட வேண்ட அவ்வினைகளின் வலிமை குறைந்து, துன்பங்களையும் துயரங்களையும் தாங்கி வாழும் சக்திநமக்குக்கிடைக்கும் என்பதுதான் இதற்குப்பொருள். இப்பயனை இறையருள் அன்றி வேறு எதுவும் தர இயலாது என்பது உறுதி. மேலும் வழிபடுவதே அவரவர் வினையை அனுபவிப்பதாகி விடுகிறது என்பதும் பொருளாகிறது. நல்வினையையும் அவரவர் அனுபவித்துத் தானே தீர்க்க வேண்டும். நல்வினையும் நீங்கினால் தானே பிறப்பு அறும். வீடு பேறு கிட்டும் என்பீராயின் சொல்லுதும், வழிபாடு, சமூகப்பணி முதலிய நல்வினை செய்யும்பொழுது நான் செய்கிறேன் என்ற உணர்வின்றிச் செய்தால் அந்நல்வினையின் பயன் நம்மைச் சேராது. நாம் அனுபவிக்க வேண்டியதில்லை. வீடு பேறு கிட்டும்.

வினைகள் நீங்கும் :

நாம் வாயினால் பாடல்களை ஓதவும் மனத்தினால் நினைக்கவும், மெய்யினால் வலம் வருதல், நமஸ்காரித்தல், உழவாரப்பணி செய்தல் போன்றன செய்யவும் வழிபாடு மேற்கொள்கின்றோம். மனம், மொழி, மெய் என்னும் இம்மூன்று கருவிகளாலும் முன்பு செய்தபாவங்கள்போகவே வழிபாட்டுநேரத்தில் இம்மூன்றினாலும் பக்தி செய்கின்றோம். இக்கருத்தை விளக்கும் நிலையில் திருஞானசம்பந்தர் திருநாரையூர்ப் பதிகத்தில் குறித்தருளுகின்றார்.

" உரையினில் வந்த பாவம் உணர்நோய்கள் உம்ம
செயல்தீங்கு குற்றம் உலகில்
வரையில் நிலாமை செய்த அவைதீரும் வண்ணம்
மிகஏத்தி நித்தம் நினைமின்

வரை சிலையாக அன்று மதில் மூன்றெரித்து
வளர் கங்குல் நங்கை வெருவத்
திரை ஒலி நஞ்சம் உண்ட சிவன்மேய செல்வத்
திருநாரையூர் கை தொழவே ''

என்பது அப்பாடல். இதின் உரையினில், அதாவது வாக்கினுலும் உணர் நோய்கள், மனத்தினுலும் செயல் நீங்கு கைகால் முதலிய உறுப்புக்களின் செயலாலும் பாவம் ஒவ்வொருநாளும் தெரிந்தும் தெரியாமலும் அளவின்றிச் செய்துவருகின்ருேம். ' நித்தல் நினைமின் '' என்பதனுல் மனத்தளவில் செய்தகுற்றம் நீங்குகிறது என்றும் 'மிக ஏத்தி' என்பதனுல் வாக்கினுல் செய்த பாவம் நீங்குகிறது என்றும், ' கை தொழவே ' என்பதனுல் மெய்யினுல் செய்த குற்றம் குறைகிறது என்றும் உணர்த்தப்படுகிறது. கைதொழவே என்று இருப்பினும் இனம்பற்றி கால், தலை, மெய் முழுமையினுலுமே வணங்க வேண்டும் என்பது கருத்து. இதனை அப்பர் சுவாமிகள் நன்கு விளக்கிக் கூறுவாராக, தலையே நீ வணங்காய் என்றும், வாயே வாழ்த்து கண்டாய் என்றும், மூக்கே நீ முரலாய், கைகாள் கூப்பித்தொழீர் என்றும் ஆணையிட்டு அருளுகின்றுர். மெய் முழுமையினுலும் தீமை செய்கின்ற நாம் அம்மெய் முழுமையாலும் வணங்க வேண்டும் என்பது இதற்குப் பொருள். அதனுல் " திரு அங்கமாலை '' என்று இப்பதிகத்திற்குப் பெயர் வந்தது.

எனவே வழிபாட்டு நேரத்தில் மனம், மொழி, மெய்கள் அனைத்தும் பக்தியில் ஈடுபடுதல்வேண்டும் என்றும், அதனுல் மனத்தாலும், மொழியாலும், மெய்யாலும் செய்த பாவங்கள் நீங்கும் என்றும் உணர்ந்து தெளியலாம்.

இவற்றை எல்லாம் நன்குணர்ந்து, இறைவழிபாட்டினை மேற்கொண்டு, அதன் வளர்ச்சியில் உயிர்களுக்கு ஒல்லும் வகை உதவி செய்து, இம்மை இன்பத்தையும், மறுமை இன்பத்தையும் வீடுபேற்றையும் இம்மண்ணுலகோர் பெறுவார்களாக!

வாழ்த்து :

இன்றுஇங்கு நடைபெற்ற குருபூசை விழாவில் பங்குகொண்ட பக்தர்கள் நலமெலாம் பெறவும், இன்று தொடங்ப்பெற்ற இப் பணிமன்றம் நாளும் வளர்ந்து சமயப்பணி, சமூகப்பணி புரிந்து சிறக்கவும், இம்மன்றத்தில் பங்கு பற்றியுள்ள அன்பர்கள் பலரும் எல்லா நலன்களும் பெற்று நீடு இனிது வா்ழவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

இறைபணி செய்வோர் எல்லாம் பெறுவர்.

உ

சிவமயம்

ஸ்ரீ முத்துக்குமார சுவாமி துதி

அளிதருசிந் தையரான அமரர்பெருஞ்
சிறைமீள அகிலம் வாழப்
பிளிறும்அயி ராவதமும் பொன்னுலகும்
விண்ணவர்கோன் பெறமே லண்ட
வெளிமுகடும் அதிரஎதிர் வருசூரன்
உளங்கலங்க விளங்கு செங்கை
ஒளிதிகழ்வே லெடுத்தமுத்துக் குமரநா
யகன்மலர்த்தாள் உளத்துள் வைப்பாம்.

— புள்ளிருக்கு வேளூர்ப் புராணம்.
(வடுகநாத தேசிகர்)

பார்வையாளர் குறிப்பு

இந்தியக் குடியரசுத் தலைவர்
மேதகு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள்
தம் துணைவியார் அவர்களுடன்
6—9—1989 அன்று
தருமை ஆதீனம்
வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயில்
தரிசனத்திற்கு வருகை புரிந்தபோது எழுதிய குறிப்பு,

வைத்தீசுவரன்கோயில் தரிசனம் மனதுக்கு மிக ரம்மியமானது. கோவில் சுத்தமாகவும் ஆராதனை சிறப்பாகவும் உள்ளது. மேன்மேலும் வளர்ச்சிபெற இறைவன் அருள்புரிவாராக.

(ஒ-ம்) ஆர். வெங்கட்ராமன்,
6—9—89. இந்தியக் குடியரசுத் தலைவர்.

இலிங்கபுராணத் தேவர்

திரு. N. சேதுராமன், B. Sc., D. M. I. T.
டைரக்டர், ராமன் & ராமன், கும்பகோணம்.

(மலர் 48, இதழ் 11, பக்கம் 592 இன் தொடர்ச்சி)

திருமூலரின் திருமந்திரம் :

திருமாலும் பிரம்மாவும் சிவபெருமானின் அடி முடி தேடிய வரலாற்றை கி. பி. 400இல் எழுதப்பட்ட இலிங்க புராணத்தில் தான் முதல் முதலாகக் காண்கிறோம். இவ்வரலாற்றை திருமூலரின் திருமந்திரத்தின் இரண்டாம் தந்திரத்தில் காணலாம். அதே தந்திரத்தில் இலிங்க புராணம் என்ற தலைப்பில் சிவபெருமானின் அஷ்டவீரங்கள் சில சொல்லப்பட்டுள்ளன. அஷ்டவீரம் முதல் முதலாக இலிங்க புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்பதை முன்பே கண்டோம். எனவே திருமூலரின் திருமந்திரம் 5 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு என்பதை அறியலாம். இலிங்கபுராணத்தின் கூறப்பட்டுள்ள பல செய்திகள் அப்படியே மாறுதலின்றித் திருமந்திரத்திலும் சொல்லப்பட்டுள்ளன. (இதைப் பற்றி ஒரு தனி ஆய்வே செய்யலாம்)

தேவாரங்களில் அடி முடி தேடிய வரலாறு :

மிகப் பழம் பதிகமான காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதியில் சிவபெருமான் "மால் அயன் காணாத பெருமான்" எனக் குறிப்பிடப்படுகின்றார் (பாடல் 80.) ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர், சம்பந்தர் பதிகங்களில் பல இடங்களில் அடி முடி தேடிய வரலாறு சொல்லப்படுகின்றது. எட்டாம் நூற்றாண்டில் அவதரித்த சுந்தரரின் பதிகங்களிலும் ஒன்பதாம் நூற்றாண்டில் அவதரித்த மாணிக்கவாசகரின் திருவாசகத்திலும் அடி முடி தேடிய வரலாறு சொல்லப்பட்டுள்ளது.

இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை :

அப்பர் பெருமானின் பொதுப்பதிகங்களில் ஒன்றான இலிங்க புராணத் திருக்குறுந்தொகையில் அடி முடி தேடிய வரலாறு சொல்லப்பட்டுள்ளது. இலிங்க புராணத்திலிருந்து இவ்வரலாறு

மேற்கோள் காட்டப்படுவதால் இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை எனப் பெயர் பெற்றது. திருமாலும் பிரம்மனும் சிவபெருமானின் அடிமுடி காணமல்தோற்றதற்கானகாரணத்தைக் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார் அப்பர் பெருமான்.

" திருமாலும் பிரம்மனும் வாசனை உள்ள மலர்களைக் கொய்து மலரிட்டு அருச்சிக்காமல் ஆணவம் மிகுந்து பெருமானைக் காண முயன்றார்கள்; அவ்விருவரும் சிவபெருமானை, பூவும் நீரும் கொண்டு அபிஷேகம் செய்யாமலும், திருச்சாந்து தீட்டாதும், காணமுயன்றார்கள்; உலகங்களைக் காவல்கொள்ளும் கபாலிஆகிய சிவபெருமானின் திருவேடத்தைக் காண்பதற்குச் சாணநீரோடு திரு அலகு கைக் கொண்டு செல்லவில்லையே. பூக்கள் பெய்த கூடையைப் புனைந்து சுமந்து செல்லவில்லையே; சிவபெருமானைக் காண நெய்யும் பாலும் கொண்டு அபிஷேகம் செய்யவில்லையே; கோவணம் உடுத்தி, எருக்கமாலை கொண்டு இண்டை புனைந்து வழிபடவில்லையே; ஆணவத்தினால் சென்று சடைதாழ் அண்ணலாகிய சிவபெருமானைத் தத்தமில் நெருக்கிச் சென்று காண முயன்றனர். மரங்களில் ஏறி மலர் பறித்து வரவில்லை; அபிஷேகத்திற்கு நீர் சுமந்து வரவில்லை. ஆணவம் நிரம்பினர். திருமாலும் பிரம்மனும் ஆகிய இருவரும் கட்டுவாங்கம் கபாலம்கைக்கொள்ளாது, எட்டு அங்கம் நிலத்துப்பட விழாது பெருமானை காண முயன்றனரே! திருநீறு பூசாமல் பெருமானை அணுகினரே. பெருமானின் திருவடிகளில்குவளைமலர்களை இட்டு வணங்கவில்லையே; திருமாலும் பிரம்மனும் ருத்திராக்கமாலை அணியாமலும், கையில் கபாலம் கொள்ளாமலும் சங்கை வாயில் வைத்து ஊதாமலும், சிவபெருமானைக் காண முயற்சி செய்தனரே; அவ்விருவரும் தேடிக் காண முடியாத தருணத்தில் சிவபெருமான் இங்கு உற்றேன் என்று இலிங்க வடிவில் தோன்றினார். "

இலிங்க புராணத் திருக்குறுந்தொகையில் அப்பர் பெருமான் கூறுவதை நன்கு கவனிக்க வேண்டும். சிவபெருமானைக் கபாலி என்று கூறுகின்றார். திருமாலும் பிரம்மனும் கோவணம் தரித்து, திருநீறு பூசி, ருத்திராக்க மாலை தரித்து, கட்டுவாங்கம் கபாலம் ஏந்தி, கபாலிக (பாசுபத) வேடத்தில் சென்று முறைப்படி அர்ச்சனை செய்திருந்தால் பெருமானைக் கண்டிருப்பார்கள் - என்று அப்பர் பெருமான் மறைமுகமாகக் கூறுகிறார். பாசுபத சித்தாந்த பூஜாவிதி முறைகள் இவ்விடத்தில் வெளிப்படையாகச் சொல்லப்படுவதை நன்கு கவனிக்க வேண்டும்.

திருநாரையூர்ப் பதிகம் :

ஆறும் திருமுறையில் திருநாரையூர்ப் பதிகத்தில், ''அரிபிரமர் தொழுதேத்தும் அத்தன் தன்னை, அந்தகனுக்கு அந்தகனை அளக்க

லசகர எரிபுரியும் இலிங்க புராணத்து உள்ளானே......'' (6-74-8) என்று அப்பர் பெருமான் கூறுவதும் நமது ஆய்வுக்கு அணி கூட்டுகிறது.

இலிங்கபுராணத் தேவர் :

முதலாம் இராஜராஜசோழன் கி. பி. 985 முதல் 1014 வரை அரசுபுரிந்தான். சிறந்த சிவபக்தன். தேவாரங்களைத்தொகுத்தவன், தஞ்சையில் பெரு உடையார் கோயிலைக் கட்டினான். இவனும் இவனது தேவியர்களும் இக்கோயிலில் எழுந்தருளுவித்த தெய்வத் திருமேனிகள் ஏராளம் ஏராளம். இவைகளில்ஒன்று இலிங்கபுராணத் தேவர் என்பதாகும். இது உற்சவ மூர்த்தி. இதனைப் பற்றி இராஜ ராஜனின் கல்வெட்டு கீழ்க்கண்டவாறு கூறுகின்றது. (தென் இந்திய சாசனம் - தொகுதி 2. கல்வெட்டு எண் 44.)

'' உடையார் ஸ்ரீ இராஜஇராஜ தேவர் தேவியார் அபிமான வல்லியார் எழுந்தருளுவித்த செப்புத் திருமேனியாவது; பீடத்துக்கு மேல் சிரசு வரை 21 விரல் ஆறு தொரை உயரமும், ஒரு முழம் 11 விரல் 2 தொரை சுற்றளவும் கொண்ட இலிங்கபுராணத் தேவர் திருமேனி ஒருவர். இவரோடும் கூட 12 விரல் நான்கு தொரை உயரத்திற்கு 4 கைகளோடும் கூடிய சிவபெருமானின் திருமேனி ஒருவர். இலிங்கத்துடன் சேர்த்து 7 விரல் உயரத்திற்குச் செய்யப் பட்ட 4 கைகளுடன் கூடியபிரம்மாவின் திருமேனிஒருவர்; இலிங்கத் தோடும் கூட செய்த 7 விரல் உயர்த்து 4 திருக்கரங்களுடன் வராக முகத்தோடு கூடிய விஷ்ணுவின் திருமேனி ஒருவர்........''.

இராஜராஜன் காலத்தில் தஞ்சைப் பெருஉடையார் கோயிலில் திருமாலும் பிரம்மனும் சிவபெருமானை வணங்குவது போன்று - அடி முடி தேடிய வரலாற்றைக் குறிக்கும் வகையில் - இலிங்க புராணத் தேவர் எழுந்தருளுவிக்கப்பட்டார். இவர் உற்சவமூர்த்தி என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்; சில சிவன் கோயில் களில் கர்ப்ப கிரகத்திற்குப் பின்னால் இலிங்கபுராணத் தேவரைக் காணலாம். (கற்சிலை) இலிங்கத்தின் நடுவே சிவபெருமான் காட்சி அளிப்பார். இலிங்கத்தின் அடியில் இடது பக்கத்தில் வராகத்தின் உருவமும் முடியில் வலது பக்கத்தில் அன்னத்தின் உருவமும் பொறிக்கப்பட்டிருக்கும். இலிங்கத்தின் இடதுபாகத்தில் திருமாலும் வலது புறத்தில் பிரம்மாவும் சிவபெருமானை வணங்கிய நிலையில் காட்சி அளிப்பார்கள்.

இராஜராஜசோழன் சிவதீட்சை பெற்றவன். சிவபாதசேகரன் என்னும் தீட்சா நாமம் பெற்றவன். இம்மன்னன் கட்டிய தஞ்சைப்

பெரு உடையார் கோயிலில் தலைமைக் குருக்களாக இருந்தவர் ஈசான சிவபண்டிதர் என்னும் பாசுபதர் ஆவார். எனவே இராஜ ராஜசோழனின்தேவியார் இக்கோயிலில் இலிங்கபுராணத்தேவர்க்கு உற்சவ திருமேனி எழுந்தருளுவித்ததில் வியப்பில்லை. (இராஜ ராஜசோழன் பாசுபதத்தில்மிகவும் பற்றுக் கொண்டவன் என்பதை கல்வெட்டுக்களால் அறியலாம்)

குடந்தைக்கு அருகே கொட்டையூரில் உள்ள சிவன் கோயிலில் இரண்டாம் இராஜாதி ராஜ சோழனுடைய கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது (1927 சாசன அறிக்கை எண் 241.) மன்னனுடைய 3 ஆவது ஆண்டில் ரிஷப மாதம், வளர்பிறை பஞ்சமியும், பூசமும் பெற்ற சனிக்கிழமை வெட்டப்பட்டது. இதன் காலம் கி. பி. 1169, வைகாசி மாதம் 10 ஆம் தேதி சனிக்கிழமை ஆகும். திருக்கோடீஸ்வரம் உடையார் கோயிலில் (கொட்டையூர்) அருண்மொழி நங்கை என்பவள் இலிங்கபுராணத் தேவரை எழுந்தருளிவித்தாள் என்றும், நித்தியபூஜை வழிபாட்டிற்காக 270காசுகள் கொடுத்தாள் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அருப்புக் கோட்டை சுந்தரேசர் ஆலயத்தில் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 8ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்று உள்ளது. இதன் காலம் கி. பி. 1224 ஆகும். (1914 சாசன அறிக்கை எண் 407) தென் இலங்கை வளஞ்சியர் சமுகத்தைச்சேர்ந்த சேகம் சேவ கங்கதேவன் என்பவன் கோயிலில் இலிங்கபுராணத் தேவரை எழுந்தருளுவித்தான் என்று கூறப் பட்டுள்ளது.

முடிவுரை :

பாசுபத சித்தாந்தத்தில் பெருமையை எடுத்து உரைக்கும் பழைய புராணம் கி. பி. 400இல் எழுதப்பட்ட இலிங்கபுராணம் ஆகும். இதில் சொல்லப்பட்டுள்ள செய்திகள் யாவும் பிற்காலத்துத் தேவாரத் திருமுறைகளில் காணப்படுகின்றன. திருமாலும், பிரம்மனும், சிவபெருமானின் அடி முடி தேடியவரலாற்றை இலிங்க புராணமே முதல் முதல் கூறுகின்றது. இதனை விளக்குகின்ற அப்பர் பெருமானின் பதிகத்திற்கு இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை என்று பெயர். இவ்வரலாற்றுக்கு ஏற்ப அமைக்கப்பட்ட தெய்வத் திருவுருவத்தை இலிங்கபுராணத் தேவர் என்று அழைத்தனர். சிவலிங்கத்தின் முடியில் வலப்பக்கம் அன்னமும் அடியில் இடப் பக்கம் வராகமும் பொறிக்கப்பட்டிருக்கும். சிவலிங்கத்தின் நடுவில் சிவபெருமான் காட்சி அளிப்பார். இடது பாகத்தில் திருமாலும் வலதுபாகத்தில் பிரம்மாவும் சிவபெருமானை வணங்கும்கோலத்தில் காட்சி அளிப்பார்கள். இலிங்கபுராணத் தேவரின் திருவுருவத்தைப் பல சிவன் கோயில்களில் கர்ப்பகிருகத்திற்குப் பின்னால் காணலாம்.

இத்தேவரின் திரு ஆராதனைக்காகச் சோழர்கள், பாண்டியர்கள் காலங்களில் நிவந்தங்கள் அளிக்கப்பட்டன. இலிங்கபுராணத் தேவரை இக்காலத்தில் அண்ணாமலையார் அல்லது லிங்கோத்பவர் என்று கூறுகின்றனர். இப்பெயர்கள் 14ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு ஏற்பட்டு இருக்கவேண்டும்.

அன்னமாய் விசும்பு பறந்து அயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னை ஆள விரும்பி என்மனம் புகுந்த
எளிமை என்றும்நான் மறக்கேன்
முன்னம் மால்அறியா ஒருவனும் இருவா
முக்கண நாற்பெரும் தடந்தோள்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்ட சோளேச் சரத்தானே. (கருவூர்த் தேவர்)

மேற்கோள் நூல்கள் :

1. இலிங்கபுராணம்.
2. திருமுறைகள்;
3. இந்தியத் தொல்பொருள் இலாகாவின் சாசன வெளியீடுகளும், எபிகிராபியா இண்டிகா தொகுதிகளும்.

கருத்தைப் பிறர்க்குத் தெரிவிக்கும் முறை

விரைந்து உரையார் மேன்மேல் உரையார்பொய் யாய
பரந்துஉரையார் பாரித்து உரையார் — ஒருங்கெனைத்தும்
சில்லெழுத்தி னாலே பொருளடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி அறிந்து.

— ஆசாரக்கோவை.

விரைந்து பேசுதல், மேலும் மேலும் பேசுதல், பொய் பேசுதல், விரிவாகப் பேசுதல் கூடாது. சில சொற்களால் பல்வகைப் பொருளடங்கப் பேச வேண்டும். காலத்தைக் கருத்துட்கொண்டு கேட்போர் செவ்வி அறிந்து சொல்லுதல் வேண்டும்.

மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,
தருமபுரம்.

(மலர் 48, இதழ் 11, பக்கம் 582 இன் தொடர்ச்சி)

விசையும் வேகமும் :

தத்தையின் பொருட்டுச் சீவகன் மேற்கொண்ட போர் உண்மையில் அச்சம் தருவதாகவே இருந்தது. சீவகன் தேரேறிப் போர் செய்த போது அத்தேர் ஓரிடத்தில் ஒருவினாடி நிற்காமல் சுற்றிச் சுழன்று விசையுடனும்வேகத்துடனும் திரிந்தது. பார்ப்பவர்களுக்கு அது மண்ணில் உள்ளதா, விண்ணில் உள்ளதா என்று தீர்மானிக்க முடியவில்லை. அதனுடைய உருவம் தெரியாததால் அது அருவமென்றே நம்பினர். மனத்தில் எண்ணுமுன்பு முகத்தின் முன்பு வந்து - கண்ணில் பட்டு - செவியில் ஒலியை மட்டும் காட்டித் தேர் மறைந்து விட்டது. சீவகன் இவ்வாறு போர் நூலின்படித் தேரை சுழலச்செய்து மன்னர்களுக்குப் பயத்தை ஏற்படுத்தினான் என்கிறார் திருத்தக்க தேவர்.

அண்ணல் தேர் பறவை யென்பார் அருவமே உருவ மென்பார்
மண்ணதே வானதென்பார் மனத்ததே முகத்த தென்பார்
கண்ணதே செவிய தென்பார் கலக்கநூல் கழிய நோக்குப்
மண்ணிய வீதிபற்றி மண்டலம் பயிற்றி னானே.

(சிந். 795)

கம்பருக்கு இந்தவிசையும் வேகமும் ஓர்உந்துதலைத் தந்திருக்க வேண்டும். இராமன் இராவணனுடைய மூலபலப்படையைத் தனித்து எதிர்த்தான். அப்போது இராமனின் போர்த்திறம் மலைப்புத்தருவதாக இருந்தது. எங்கு நிற்கிறான், எங்குப் போகிறான் என்றே கணிக்க முடியாதபடி ஒருவிநாடிக்கு ஒரு இடமாகச் சாரிகை திரிந்து சாகசம் செய்தான் என்று காட்டினார் கம்பர்.

அந்தக் காட்சி வருணனையில் சிந்தாமணியின் சாயல் இருப்பது இப்போது நன்கு விளங்குகிறது.

முன்னே உளன் பின்னேஉளன் முகத்தேஉளன் அகத்தின்
தன்னே உளன் மருங்கேஉளன் தலைமேல்உளன் மலைமேல்
சொன்னே உளன் நிலத்தேஉளன் விசும்பே உளன் கொடியோர்
என்னே ஒருகடுப்பு என்றிட இருஞ் சாரிகை திரிந்தான்.

(கம். 9411.)

உடல் புகுந்து தடவிய வாளி :

தத்தையின் பொருட்டு நடந்த போரில் பகைவர்களின்மார்பைச் சீவகனின் அம்புகள் ஊடுருவின. கவசங்கீறி உள்நுழைந்த அம்பு - இனிமேல் எடுக்கும் உடம்பாலும்கூடப் பிறர்மனையை நயக்காதீர்கள் என்று சொல்லி இதயத்தைத் தாக்கி உயிரைப் பிரித்தது-என்பது சிந்தாமணி.

நன்மன வேந்தர் தங்க ணகைமணி மார்ப நக்கிப்
புன்மன வேந்தர் தங்கள் பொன்வணி கவசங்கீறி
இன்னுயிர் கவர்ந்து நிலை இனிக் கொள்ளும் உடம்பினாலும்
துன்னன்மி னென்ப வேபோற் சுடுசரம் பரந்தவன்றே.

(சிந். 799)

கம்பருக்கு இது மிகவுயர்ந்த கற்பனையாகப்பட்டது. இராவணனும் பிறன்மனை நயந்தான். இராமனின் வேதமெனத் தப்பாத சரம் இராவணனின் கவசம் பிளந்து உள்ளத்தில் பாய்ந்தது. சீதையைக் கவர்ந்தகாதல் எங்கேஇருக்கிறது என்று தேடிப் பார்த்ததால்தான் உடம்பு முழுமையுமாகத் துளைகள் ஏற்பட்டன என்று இந்த அபூர்வமான கற்பனைக்குத் தன்காவியத்தில் தக்க இடம் தந்து போற்றிக் கொண்டரர்.

வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலுப் கீழும்
எள்ளிருக்கும் இடமின்றி உயிரிருக்கும்
இடன்நாடி இழைத்தவாறே
கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச் சிறையிற் கரந்தகாதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி. (கம். 9940)

ஒளி குன்றிய ஒற்றுமை :

சாம்புதல் என்ற சொல்லுக்கு ஒளி குன்றல் என்பது பொருள். தத்தையை வீணைப் போரில் வென்ற சீவகன் வெற்றியின் அடையாளமாகச் சங்கை வாயில் வைத்து முழக்கினான். பாரதப் போரில் கண்ணன் வலம்புரிகளில் வைத்துக் கொழித்தெடுக்கப் பட்ட பாஞ்சசன்னியத்தை வாயில் வைத்து ஊதினாற் போல இருந்தது அக்காட்சி. ஆளியின் முழக்கைக்கேட்ட யானைக் கூட்டம் தளர்ந்து வருந்தினாற் போல - பகை மன்னர்கள் எல்லாம் தளர்ந்து கண்ணொளி மங்கினார்கள்.

செங்கண்மால் தெழிக்கப்பட்ட வலம்புரித் துருவம் கொண்ட
சங்கு வாய்வைத்து நம்பன் தெழித்தலும் தருக ணாளி
பொங்கிய முழக்கின்வேழப் பேரினம் புலம்பி னாற்போல்
தங்குதார் மன்ன ரெல்லாந் தளர்ந்துகண் சாம்பினாரே.

(சிந். 811.)

கம்பர் இப்படி ஒரு மனநிலையில் இராவணன் இருப்பதைக் காட்டுகிறார். படைகளெல்லாம் இழந்து பரிபவப்பட்டு நிற்கும் அவனை இராமன்பார்த்து மாருதம்அறைந்த பூவைப்பூப்போல படைகளிழந்து நிற்கும் உன்னை இப்போது வெற்றி கொள்வது எளிது. ஆனால் அது வீரத்திற்கு இழுக்கு. இன்று போய்ப் போருக்கு நாளை வா - என அவன் ஆவியையும் அரசையும் அன்று அவனுக்கு நல்கினான் கோசலநாடுடைவள்ளல்.

இராமன் முன் நாணத்தால் தலைகுனிந்தவன் - பூதலம் என்னும் நங்கையை மட்டுமே நோக்கி இலங்கை மீண்டான்.

வான்நகும் மண்ணும் எல்லாம் நகும் நெடுவயிரத் தோளான்
நான்நகு பகைஞர் எல்லாம் நகுவர் என்று அதற்கு நாணான்
வேல்நகு நெடுங்கண் செவ்வாய் மெல்லியல் மிதிலைவந்த
சானகி நகுவள் என்றே நாணத்தால் சாம்புகின்றான்.

(கம். 7277.)

சாம்பும் நிலையைத் தக்க வார்த்தைகளால் ஒளியூட்டிக் காட்டினார் கம்பர் எனலாம்.

(வளரும்)

கட்டுரை எண். 22.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

இறைவனது அருட் சக்தியே பிரமன் முதலியோரிடத்து நின்று படைப்பாதித் தொழில்களைச் செய்யும் எனக் கூறின், சத்திகள் பலவோ என்னும் வினா எழும். அதற்கு அருள்நந்தி சிவாசாரியார் அடுத்து விளக்கம் தருகின்றார். சக்தி ஒன்றுதான்; பிரமன் முதலியோரிடத்துநின்று செய்யும்தொழில் வேறுபாட்டால் சேதநிமுதலிய பல சத்திகளாக வைத்து எண்ணப்படும். அது எதுபோல எனில்' அரசனது சத்தி ஒன்றே மந்திரி முதலாயினாரிடத்து நின்று செய்யும் தொழில் வேறுபாட்டால் படைத்தலைவர், பாடிகாவலர் முதலிய பல்வேறு வகைப்பட்டாற்போல எனக் கொள்ளல்வேண்டும். அச்சத்தி முதல்வனோடு பிரிவின்றி நின்று அம்முதல்வன் நினைத்த படியே போக மோட்சங்களைக் கொடுக்கும்.

"சத்திதான் பலவோ என்னில் தானொன்றே அநேகமாக
வைத்திடும் காரியத்தால் மந்திரி ஆதிக்கெல்லாம்
உய்த்திடும் ஒருவன் சத்திபோல் அரனுடையதாகிப்
புத்திமுத்திகளை எல்லாம் புரிந்தவன் நினைந்தவாகும்"

என்னும் பாடலில் அக்கருத்துக்களைக் காணலாம். இப்பாடலில் ஈற்றடி சிந்திக்கத்தக்கது. இறைவன் நினைந்தவண்ணமே எல்லாம் நடைபெறும் என்பதனால், நான்முகன், திருமால் முதலாயினவர்களிடத்தும் அங்ஙனமோ என்னும் ஐயம் எழும். அவர்களின் விருப்பமும் மாற்றியமைந்து இறைவனின் விருப்பமே நிறைவுபெறும் என்பது இவ்வரிக்குப்பொருள். இதற்குப் பல எடுத்துக்காட்டுக்களைக் காணலாம்.

தக்கன் வேள்வி செய்த பொழுது நான்முகன், திருமால் முதலாயினோர் அதற்குத் துணைவராய் நின்றும் அவர்கள் நினைந்த வண்ணம் வேள்வி நிறைவேறாது இறைவன் எண்ணியவாறே வேள்வி அழிக்கப்பட்டது; மார்க்கண்டேயரின் உயிரைக் கவர வந்த காலன் எண்ணம் தோற்று இறைவன் நினைந்த வண்ணம் அவரின் வாழ்நாள் நீட்டிக்கப்பட்டது. அமுதம் பெற முனைந்த பிரமா, திருமால் முதலாயினோர் எண்ணம் நிறைவேறாமல் முதல்வன்

எண்ணப்படித் திருப்பாற்கடலில் முதலில் ஆலகால விஷம் தோன்றியது. இந்நிகழ்ச்சிகளால் எல்லாம் அரன் நினைந்தவாறன்றி வேறு ஒன்று நடைபெறாது என்பது நன்கு அறிய முடியும்.

அடுத்து இறைவனது அருட்சக்தியின் வடிவம் இது என்றும் அச்சத்தியின் செயற்பாகுபாடுகள் இவை என்றும் அவற்றிற்கும் அச்சத்திக்கும் உள்ள தொடர்பு இன்னது என்றும் விளக்குகின்றார்.

சிவசத்தியின் வடிவம் சுத்தஞானம் என்றும் அதுவே பராசக்தி என்றும் அச்சத்தியே இச்சை, கிரியைகளை இயக்கும் என்றும் கூறுகின்றார். இச்சை, கிரியைகள் வேற்றுத்தொழில்கள் ஆதலால் இவை அந்த ஞானத்தினின்றும் தோன்றுவனவோ என்னில் ஞானம் எவ்வாறு உள்ளதோ அவ்வாறு இச்சை, கிரியைகளும் உள என்று வேதாகமங்கள் சொல்லுதலால் அவை அதனால்காரியப்படும். இக்கருத்துக்களைக் கீழ்வரும் பாடல் கூறுகின்றது.

"சத்திதான் வடிவேது என்னில் தடையிலா ஞானமாகும்
உய்த்திடும் இச்சை செய்தி இவை ஞானத்துளவோ என்னில்
எத்திற ஞான முள்ளது அத்திறம் இச்சை செய்தி
வைத்தவன் மறைப்பில் ஞானம் மருவிடும் கிரியை எல்லாம்".

இப்பாடலில் சத்தியின் வடிவு தடை இலா ஞானம் என்றார். இது பராசக்தி எனப்பெறும். பரம்பொருள் பரசிவன் எனப்படுதல் போல மேலான சத்தி பராசத்தி என்றாயிற்று. பரம் என்பதற்கு மேலான என்பது பொருள். தடையிலா ஞானம் பராசக்தி எனில், தடை செய்யும் ஞானம் என்று ஒன்று உண்டோ என்னும் ஐயம் எழும். உயிர்களின் ஆணவமலம் பக்குவம் அடைதற்பொருட்டு உடம்பு முதலியவற்றைக் கொடுத்துக் கன்மங்களை நுகர்வித்து மறைத்தல் தொழிலைச் செய்யும் சிவசக்தி தடைசெய்யும் ஞானமாகும். இதுவே திரோதான சத்தியாம். மலம் பக்குவமான ஆன்மாக்களுக்கு அருள் மாத்திரம் செய்யும் சிவசக்தி தடை இலா ஞானமாகிய பராசத்தியாம். இதனால்தான் சிவப்பிரகாசம் என்னும் சாத்திரநூல் சிவசக்தியாகிய பராசக்தியை, "சத்தமாம் சத்தி ஞானச்சுடராகும்" என்று கூறுகிறது.

இதுவரை சிந்திக்கப்பெற்ற பராசக்தியானது, பொதுவகையால் ஒன்றாய் நின்று, ஐந்து தொழில்களைச் செய்யும் சிறப்பு வகையால் இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்று மூன்று வகைப்படும். இச்சா சத்தியாவது, இறைவனது உயிர்களுக்கு மலத்தை நீக்கி முத்தியைக் கொடுத்தற்பொருட்டுக் கொண்ட விருப்பமாகும். ஞானசத்தியாவது, அம்முதல்வன் உயிர்களுக்கு முத்தியை அளித்தற்பொருட்டுச் செய்ய வேண்டிய உபாயங்களை

எல்லாம் அறிதலாகும். உபாயங்களாவன :- படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன. கிரியாசத்தியாவது அவ்வுபாயங்களைச் செய்வது ஆகும். இக்கருத்துக்களை,

"ஒன்றதாய் இச்சா ஞானக்கிரியை என்றொரு மூன்றாகி
நின்றிடும் சத்தி; இச்சை உயிர்க்கருள் நேசமாகும்;
நன்றெலா ஞான சத்தியால் நயந்தறிவன் நாதன்;
அன்றருட் கிரியை தன்னால் ஆக்குவன் அகிலமெல்லாம்"

என்னும் பாடலில் கூறுகின்றார் ஆசிரியர்.

எனவே, இறைவன் ஒருவன்தான் என்பதும் அவன் அருள் சத்தியும்ஒன்றுதான் என்றும் மற்றவை அனைத்தும் அதுதொழிற்படு மாற்றால் பெயர் பெறும் பிரிவுடையனவே என்றும் உணர்ந்து தெளிதல் கடமையாகும்.

(தொடரும்)

தாயின் தனிப்பண்பு

எனக்குத் தொழில்கொடும் தீதான
பாவம் இயற்றிடுவ(து);
உனக்குத் தொழில், அது தீர்த்துஎன்னை
ஆள்வது; உறும் குழவி
தனக்குத் தொழில் மணல்சோறு அளைந்து
ஆடுதல்; உங்கரியே!
அனைக்குத் தொழில்நறு நீராட்டிப்
போற்றி அருள்செய்வதே.

— புவனாம்பிகை கலைஞான தீபம்.

பிறந்த செல்வப் பெண்மகவின் தொழில், மணல்சோறு ஆக்கும் விளையாட்டால் உடலில் புழுதி முதலிய அழுக்கு அடைதல். பெற்ற தாயின்தொழில், நல்லநீரில் குளிப்பாட்டிக் காத்தருளல். அவ்வாறே என் தொழில் தீய பாவமே செய்தல். நின்செய்கை அந்தப் பாவத்தைத் தீர்த்து அடியேனை ஆட்கொள்ளுதல் ஆகும்.

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்

(Western Philosophers)

சுவாமி வீரபாகு

7. துறவியார் தாமஸ் அக்வினஸ்

(Saint Thomas Acquinas)

(கி. பி. 1225-1274)

(மலர் 48, இதழ் 10, பக்கம் 525 இன் தொடர்ச்சி.)

துறவியாக விடாத உறவினர்கள் :

"தந்தையே! நான் ஒரு துறவியாகவே விரும்புகிறேன்' என்றான் அந்த இளைஞன்.

" ஒரு ... என்ன? .... என்ன சொன்னும்? "

" நான் ஒரு துறவியாக விரும்புகிறேன் என்றேன்? "

தந்தைக்குத் தாங்க முடியாத ஆத்திரம் உண்டாயிற்று. உரத்த குரலில் பதில் உரைத்தார் தந்தை.

"என்ன? துறவியாக விரும்புகிருயா? நம் அந்தஸ்து என்ன? அரச பாரம்பரியத்தைச் சேர்ந்த நம்மில் ஒருவனுக்கு இப்படி ஓர் ஆசையா? காலணி கூட இல்லாத கௌபீனதாரியாகத் திரியும் சாமியாராய் நீ ஆகவேண்டுமா? சொல்லடா! "

" ஆமாம்! தந்தையே! அப்படித்தான் எனக்கு ஆசை! "

" பரதேசியாகிப் பாழும் வறுமையில் வாடவேண்டுமா? உன் அரசபோகம் அனைத்தும் துறந்து ஆண்டியாக வேண்டுமா? பிச்சை எடுத்துவாழ நீ பிரியப்படுகிருயா? ரோக்கா செக்கா (Rocca Secca) வம்சாவளியைச் சேர்ந்த ஒருவன் வாழாவெட்டியாகித் திரிய வேண்டுமா? முடியாது முடியாது முக்காலும் முடியாது! முட்டாளே! போ! " - ஆவேச பதில்.

" ஏன் முடியாது ஐயா? பெரிய அரசபோகத்திலிருந்த அசினி பிரான்ஸிஸ் (Francis of Assini) துறவியானர். அவர் என்ன முட்டாளா? கூறுங்கள். " என்ருன் இளைஞன்.

'' அவன் முட்டாள் மட்டுமா? பைத்தியக்காரனும் கூட. பெரிய நிலையை விட்டு ஓடிப்போய்ப் பிச்சைக்காரன் ஆகப்பிரிய படுபவன் முட்டாள்! பைத்தியக்காரன்! பேதை! அறிவுக்கெட்டவன்! ஏழ்மையை நாடி எவனடா போவான்? அக்வினோ (Acqvino) பாரம்பரியம் வீரபாரம்பரியம். ஆட்சிபுரிந்த அரச குடும்பமடா! முட்டாள்! அடிமுட்டாள். உன் சகோதரர்கள் போல் உன்னையும் ஓர் அரிய போர் வீரனாக ஆக்க அல்லவா எண்ணியுள்ளேன்? வீரனாக வேண்டும். வீணன் ஆகக் கூடாது. போ! போ! போ! '' என்று அதட்டி அனுப்பி விட்டான் அந்த இளைஞனின் அப்பன்.

அதிர்ச்சி அடைந்த அவனுடைய தாய், போப்புக்குக் கடிதம் விடுத்தாள். தன் பிள்ளைக்கு இப்படி ஒரு பைத்தியக்காரத்தனமான எண்ணம் வந்துற்று எய்தியுள்ளதனையும், அவனுக்கு அறிவுரை அருளுமாறு கோரியும், துறவியாக மாற அவனுக்கு அனுமதி துளியும் தரவேண்டாம் என்றும் போப்பின்பால் விண்ணப்பித்தாள். போப்பும் ஆவன புரிவதாகப் பதில் விடுத்தார்.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த அக்வினோ பிரபுத்துவ பாரம் பரியத்தைச் சேர்ந்தவர் செயிண்ட் தாமஸ் அக்வினஸ் (Saint thomas Acqvinos) இக்குடும்பம்லாம்பார்டு மன்னர்கள் (Lambard) மரபிலிருந்து தோற்றம் கொண்டது. புனிதரோமானியசக்ர வர்த்திக்கு (Haly roman emperar) தாமஸ் அக்வினஸின் தந்தை மருகனாவார். இவருக்கு ஏழு ஆண்பிள்ளைகள். அறுவரும் படைப் பயிற்சி பெற்று அணிவகுத்து நிற்கும் வீரர்கள் ஆயினர். ஆனால் தாமஸ் அக்வினஸ் மட்டும் தம் குடும்பத்தின் தகுதிக்குப் பங்கம் விளைத்து விட்டதாக அவன் தன் தந்தை எண்ணி வருந்தினன் - மகனை அவன் வழியில் விட மறுத்தான்!

தாமஸ் அக்வினஸ், தந்தையின் சொல்லுக்குக் கட்டுப்பட வில்லை. திருட்டுத்தனமாக ஒருநாள் வீட்டைத் துறந்து வெளி நடந்து விட்டார் தாமஸ். ஓர் இரவு தாமஸ் வழிப் பாதையில் ஒரு மரத்தடியில் தூங்கிக் கொண்டிருந்தார். நாலைந்து குதிரைவீரர்கள் நள்ளிரவில் அங்கு வந்தனர். அவர்கள் தாமஸை எழுப்பி எவ்விதத் தடையும் கூறுமல் தங்களோடு வருமாறு கூப்பிட்டார்கள். ஆனால் தாமஸ் வீடு திரும்ப மறுத்தார். வந்திருந்த குதிரை வீரர்கள் அனைவரும் அவனது சகோதரர்கள். தாமஸ் பலாத்காரமாகக் கட்டிப் பட்டுத் தூக்கிச் செல்லப்பட்டான். தங்கள் கோட்டையின் மேல் மாடியிலே தாமஸ் சிறைவைக்கப்பட்டான். பலமான பாது காப்பு.

ஒருநாள் ஓர் அழகிய மங்கை அங்கு அனுப்பப் பட்டாள். ஆனால் தாமஸ் அக்வினஸ் அறிவு கெட்டு அவள் மாய வலையில் சிக்க வில்லை. அவள் வந்த வழிபார்த்துத் திரும்பிப் போனாள்.

அடுத்த நாள் மற்றொரு பெண் அங்கு வந்தாள். அவள் தாமஸின் சகோதரி, அவள் தாமஸ் தப்பிப் போக உதவுவதாக உரைத்தாள். கோட்டை மேல் மாடியிலிருந்து கயிறு ஒன்று தொங்கவிடப்பட்டது. ஒருமூட்டையில் தேவைப் படும் உணவும் ஆகும் வைக்கப்பட்டன. தாமஸ் அம்மூட்டையுடன் தரையை அடைந்தான் - தன் வழி நடந்தான் - தன் வைராக்கியத்தைக் கொண்டு செலுத்தினுன். ஒருமனிதன் கிருகஸ்த ஆசிரமத்திலிருந்து சந்நியாச ஆசிரமத்திற்கு வருவது அவ்வளவு சுலபமல்ல! அனுபவித்தவர்கள் தான் அறிவார்கள். காரணம் என்ன? சமுதாயக் கட்டு அப்படி!

தக்க ஆசான்பால் தாமஸ் சேர்ந்தார் :

ஒரு யாத்திரிகர் கூட்டம் பாரீஸ் (Paris) பாதையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. நமது தாமஸ் அக்வினுஸூம் அக் கூட்டத்தாருடன் நடந்தார். அக்கூட்டத்தார் அனைவரும் மௌன மாக அமைதியாகப் போய்க் கொண்டிருந்தனர். கால் நடை யாத்திரை தாமஸூக்கு ஓர் அற்புதமான புதிய அனுபவம் - கண்ட இடத்தில் உறங்குவது; கால் வலிக்கும் வரை நடப்பது; கிடைத் ததை உண்பது-இது தாமஸூக்கு ஒருகிளர்ச்சியை உண்டாக்கியது. 1500 மையல்கள் கால் நடையாத்திரை – கால் பாதம் கன்றிப்புண் ஆயிற்று. பல்கலைக் கழகப் பதியான (University city) பாரீஸ் நகரைப் பல மாதங்கட்குப் பின் வந்தடைந்தார் அக்வினுஸ். அங்கு கோலோன் என்ற இடத்தில் தாமஸ் போற்றி வந்த தக்க ஆசான் ஆல்பர்ட்டஸ் மேக்னஸ் (Albertus magnus) என்பவர் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றி வருவதாக அறிந்து மகிழ்ந்தார். கால்நடை அயர்ச்சி கட்டோடு நீங்கியது. கால் புண்ணோடு புரையோடிக் கிடந்த கவலை மனப்புண் மாறி நீங்கியது. பிரசங்க மண்டபத்துள் பீடுநடை நடந்தார். பருத்த உடலைக் கொண்டு போய் ஆசானின் பாதத்தருகே கிடத்தினுர். அமர்ந்தார்.

ஆல்பர்ட்டஸ் மேக்னஸ் ஓர் அறிவுக் களஞ்சியம். இத்தனை அறிவு படைத்தவர்கள் எப்போதோ நூற்றுண்டுக்கு ஒருவர் கூடத் தோன்றுவதில்லை. இவர் இடைக்காலக் கலாசாரத்தின் சொல்லாம நடமாடும் இருப்பிடம். (Albertus was a walking and talking summary of medieval culture) அரிஸ்டாட்டிலின் பாரம்பரியத்தை அற்புதமாக நடாத்திவரும் மாபெருமேதை. ஐரோப்பியநாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் அறிவுத்தாகம் கொண்ட மாணவ மணிகள் அநேகர் இங்கு வருவதுண்டு. இந்த ஆசான்பால் அத் தகைய மாணவர்கள் ஓர் அரிய ஈர்ப்பு சக்தி உள்ளதை உணர்ந் தனர். அந்த உண்மையை அக்வினுஸூம் அனுபவத்தில் கண்டார்.

சேரிடம் சேர்ந்தால் சித்தையில் ஒரு நிறைவும் செழுமையும், மகிழ்வும் உண்டாவது இயல்பு தானே?

பக்குவமுற்ற ஆசானும் பணிவு கொண்ட சீடனும்

தாமஸ் அக்வினஸின், சகமாணவர்கட்கு ஒரு கேள்விப் பொருளாகப் போனார். 'மாடு போகிறது' என்று மனம் போனவாறு பேசுவார்கள். ஆனால் தாமஸோ எதற்கும் பதில் கூறாது தன் வேலையை ஏற்றுத் தனித்திருப்பார். பின்னர் "ஊமை மாடு" என்று இவரை உரைத்தனர். இவர், தம் பாடத்திலே கண்ணும் கருத்துமாக ஈடுபட்டிருந்தார். மற்றவர்கள் போல் அல்லாமல் மணிக்கணக்கில் அமர்ந்திருந்து பாடத்தை மனத்தில் வாங்கிக் கொள்வார். தங்கள் திறத்தைக் காட்ட பிறமாணவர்கள் தர்க்கம் புரிவர் - குதர்க்கம் பேசுவர்-கலந்துரை ஆடுவர். ஆனால்தாமஸ் "பேசாமடந்தையாய்" இருந்து பேசப்படும் பொருளைக் கிரகிப்பார் - அப்படி ஓர் அமைதியின் வடிவு அவர்.

ஒரு நாள் ஆசான் ஆல்பர்ட்டஸ் தன்பால் தாமஸை அழைத்தார். அவர்பால் ஆசான் சில வினாக்களை வினவினர். சமயக் கல்வி (Theology) பற்றியும், இலக்கண முறைகள் பற்றியும், தத்துவம் அளவியல் பற்றியும் இருவரும் கலந்துரையாடினர். அடுத்தநாள் காலை வகுப்பில் ஆசான் அறிவித்தார். அருமை மாணவ மணிகளே! தாமஸ் ஓர் ஊமை மாடா? இப்படிப் பேசும் நீங்களே ஒரு நாள் அவன் பேச நீங்கள் எல்லாம் கேட்கத்தான் போகிறீர்கள். மண்ணில் ஒருநாள் தாமஸ் மாமேதையாய்விளங்கத்தான் போகிறான் - பாருங்கள்! என்று பகர்ந்தார்.

தாமஸும் ஆல்பர்ட்டஸும் நெருங்கிய நண்பர்கள் போல் நேசமுற்றுப் பழகினர். ஆல்பர்ட்டஸ் மாற்றமாகி மாநகரான பாரீஸுக்குப் புறப்பட்டார். தாமஸ் அக்வினஸும் அவருடனே புறப்பட்டார். பாரீஸில் சமயக்கல்வியில் பட்டம் பெற்றார். கடைசி வரை அடக்கத்தின் அவதாரமாகவே திகழ்ந்தார். துறவுக்கோலம் பூண்டார்-தூயவாழ்க்கையே வாழ்ந்தார். நன்னெறிவாழ்க்கைக்கே தன்னை, நாடி, முழுதும் அர்ப்பணித்து வாழ்ந்தார். துறவிபிரான்ஸிஸைத் தன் ஆதர்ஷண புருஷராக ஏற்று அவர் வாழ்ந்த வழியிலே அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றினர். கிருத்துவின் வாழ்க்கை நாடகத்தை மட்டும் கருதாமல் அவரது தத்துவ வழக்கையே பின்பற்றிவாழ்ந்துகாட்டிய பெருமை துறவியார் தாமஸ் அக்வினஸுக்கு உண்டு.

அக்வினஸின் அருட்பணிகள் :

இவர் தம் முப்பத்து மூன்றாவது வயதிலே, தம் இடையறா முயற்சியின் பயனால் பாரீஸ் பல்கலைக் கழகத்தில் சமயக் கல்வித் துறையில் பேராசிரியராகப் பதவி ஏற்றார். அரிஸ்டாட்டிலின் கோட்பாடுகளை ஐயம் திரிபு அறக் கற்றார். கிருத்துவச் சமயத்தில் அரிஸ்டாட்டிலின் நெறிகளைப்புகுத்தி அச்சமயத்திற்கு ஓர் அறிவியல் சீர்மையை உண்டாக்கி அழகு செய்தார் அக்வினஸ். அவர் மேடைகளில் பேசுங்கால் கண்களை மூடிக்கொண்டு வானை நோக்கியவாறு அருள்மொழி வாசகங்களைக் கூறுவார். கிருத்துவமதத்தலைவர்களின் ஆர்ப்பாட்டப் போக்குக் கிஞ்சித்தும் அவருக்குப் பிடிக்கவில்லை, ஏசுநாதர் இதையா போதித்தார்? அறவாழ்வு கொண்ட எளிமையையும் ஆன்மீக வலிமையும் அன்றோ அவர் போதித்தார் - அதை வல்லவர் நாம் பின்பற்ற வேண்டும் என நயம்பட மக்களை நெறிப்படுத்துவார். மக்கள் மறைந்த மேதைகளின் எலும்புகளையே வணங்குகின்றனர்; எழுச்சிமிக்க அவர்தமவாழும் ஆன்மீகநெறியை அந்தோ! மறநது விட்டனரே என மனம் வருந்துவார். அன்பும் ஞானமும் ஆன்மீகத்தின் இருபாதங்கள் என வருணிப்பார். சாக்ரட்டீஸ் போல, பிளேட்டோ போல, புத்தரைப் போல, கன்பியூஷியஸ் போல, ஞானத்தை உடலாகவும் அன்பினை உயிராகவும் போற்றிக்காத்த பெருமை, துறவி தாமஸ் அக்வினஸுக்கு உண்டு என்றால் அது மிகை ஆகாது.

அக்வினஸ் ஆக்கிய அரிய நூல்கள் :

அக்வினஸ் ஆக்கம் கருதி ஏழு நூல்கள் எழுதிப் படைத்தார். அவற்றுள் தத்துவம், சமயம், நீதி சாத்திரம் ஆகியவற்றுக்கு ஒரு மைலேடாகவிளங்கிய "சம்மாதியாலாஜிகா" (Summa theologica) என்ற அரும் பெரும் நூல் குறிப்பிடத்தக்கது. கடவுள் உள்ளார் என்பதைப் பற்றி நம்பிக்கை அடிப்படையால் அன்றி நல்லறிவுக்கு ஏற்ற முறையில் வாதிட்டு நிறுவியுள்ளார் அந்நூலில். திருநூலில் காணப்படும் கோட்பாடுகளைத் தருக்க ரீதியில் எடுத்தியம்பி, சமுதாய நீதிசாத்திர தத்துவத்தினை எவரும் ஏற்கும் முறையில் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். ஸ்பினோஸாஎன்ற பிற்காலத்தத்துவ மேதை எழுதிய நீதி சாத்திரம் (Ethics) என்ற நூலுக்கு இதுவே அடிப்படையாக அமைந்துள்ளது என்ற உண்மை அறிய வேண்டிய உண்மை ஆகும். அறிவுபூர்வமான உண்மை (Sensible fact) என்ற நூல் ஆண்டவனைப் பற்றிய அற்புதப் பனுவல் ஆகும்.

இந்த பிரபஞ்சம் முற்றும் ஓர் இன்னிசைக் கூடம். அந்தத் தெய்வீக இசைவாணன் அவரவர்க்கு ஏற்றவாறு உரிய திறவை

முடுக்கி ஓசை எழுப்புகிருன். அத்தனையும் இறைமயமாக இலங்கு கிறது. நம்மில் அந்த நாதம் ஊடுருவி இயக்குவதை நாம் அறிவதில்லை. ஒவ்வொருவரின் ஊடும் அந்த ஒய்யார இசை அதிர்வு செய்கிறது (Vibrates) அந்த ஐக்கியப்பாடுகளை (Harmonies) நம் சிந்தையும் சிரமும் இணைந்து நெறிவழிப்பட்டால் உன்னதமான முறையில் உணர முடியும். அவர் ஆண்டவனைப் பற்றியும்வாழ்க்கையின் கூறுபாடு பற்றியும், நடத்தை பற்றியும், நற்சிந்தை பற்றியும் இந்நூலில் இனிது விளக்குகிருர்.

துறவியார்தாமஸ் அக்வினுஸ் தம் 50ஆம்வயதில் கி.பி. 1274ல் தாம் பருத்த பூதவுடலினை விட்டுப் பாரில் புகழ் உடம்பை எய்தினுர். அவர் இறைவனது திருவடிகளைச் சேர்வதற்கு முன் அன்பர்களும், அருளாளர்களும், அறிஞர்களும், மாமேதைகளை அவரை வந்து சூழ்ந்தனர். அவர்தம் சேவைகளை வியந்து பாராட்டினர். அவர்தம் ஞானப்பனுவங்களின் அருமைப் பாட்டினை விதந்து ஓதினர். அவர் ஒரு கோவேறுக்குதிரையின் (Mule) மீது அமர்ந்த கலாச்சாரத்தின் நிலைக்களமாக விளங்கிய இத்தாலி நாடு முற்றும் குறுக்கும் நெடுக்கும் திரிந்து, தம் கொள்கைகளைப் பரப்பிய மேன்மையை மக்கள் மறக்கவில்லை. அவர் நினைவு மக்கள் நெஞ்சிலே நீங்காமல் பசுமையாகவே நின்று இலங்கியது! எழுத்தாலும் பேச்சாலும் இனிது தொண்டாற்றிய இவரை எவரே மறப்பார்?

பெற்ருேர்கள் தடையாக நின்ற போதும் பெரியதொரு வைராக்கியம் கொண்டு, துறவறம் பூண்டு தூய வாழ்க்கை வாழ்ந்த செயின்ட் தாமஸ் அக்வினுஸின் வாழ்க்கை தத்துவப் பாதையிலே ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த மைல் கல்லாக விளங்கியது என்று குறிப்பிடுவது தவருகாது.

ஆதார நூல்கள் !

Basic Teachings of Great Philosophers by S. E. Frost
Living Biographies of Great Philosophersby Thomos & Thoma
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom [Stroll
Get to know Philosophy by Hugh Harris.
Student's History of Philosophy by Arthur Kenyon Rogers.
A History of Philosophy by Frank Thilly.

(தொடரும்)

சத்தியார், ஐயடிகள்காடவர்கோன்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ., பி.எட்.,
தருமபுரம்

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 1—10—1989 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

தருமை ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவி கோயிலில் நவராத்திரி விழாவை ஒட்டி, 39 ஆவது சதசண்டி வேள்வி நிகழ்ந்து கொண்டிருந்தது. சிறப்பு வழிபாடுகள், சுவாசினீ, குமாரி வடுபூஜைகள், வேதம், திருமுறைப் பாராயணம், லட்சார்ச்சனை, மேருவிற்கு சகஸ்ரநாம அருச்சனை முதலிய அங்கங்களோடு திருக்கோயில் விழாப்பொலிவோடு காட்சியளித்தது! அன்பர்கள் தேவிதரிசனம் செய்யத் திருக்கோயிலுக்கு வந்தவண்ணம் இருந்தனர். நவராத்திரியின் இரண்டாம் நாளும் முதல்ஞாயிறும் இணைந்தன. சொக்கநாதர் வழிபாட்டை அடுத்துக்குருமணிகள் நியமமாகச்செய்யும் பாராயணம் முடிந்து சித்திராசனத்தில் அமர்ந்தார்கள்.

திருமுறைப் பாராயணத்துடன் அருளுபதேசம் தொடங்கிற்று, மாதச் சிறப்புத் திருநாட்களைப் பற்றியும் அம்மாதத்தில் வரும் நாயன்மார் குருபூஜைத் திருநாட்களைப் பற்றியும் அருளிச் செய்து புராணம்தொடங்கினார்கள். சத்திநாயனார், ஐயடிகள்காடவர்கோன் நாயனார் புராணங்களைத் தத்துவச் செறிவோடு உபதேசித்தார்கள்.

"கழல் சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்" - இது சுந்தரர் செந்தமிழாம் திருத்தொண்டத்தொகையில் அமைந்த தொடர். சத்தியார் தோன்றியருளிய தலம் வரிஞ்சையூர். இது நாகைப்பட்டினத்திற்கு அருகே கீழ்வேளூர் (கீவளூர்) என்னும் ஊருக்குத் தென் கிழக்கில் 3 கி. மீ. தொலைவில் உள்ளது. இத்தலத்தில் வேளாண் குடியில் தோன்றியவர் சத்தியார். சேக்கிழார் வேளாண்குடியை வாய்மை வேளாண்குடி எனச்சிறப்பித்தபாங்கைப் பழையனூர் வேளாளர் வரலாற்றுடன்ஒப்பிட்டுச் சிறப்பித்தருளினார்கள். ஊரின் இயற்கை வளத்தைச் சேக்கிழார்,

" களமர் அட்ட கமலம் பொழிந்ததேன்
குளம் நிறைப்பது சோல்ஒலி நில் எண்திசை
அளவும் ஆணைச் செயத்தப்பம் நாட்டிய
வளவர் காவிரி நாட்டு வரிஞ்சையூர் "

என அருளிச் செய்தார். சோழர் செங்கோல் செலுத்திய பாங்கை உணர்த்திய சேக்கிழார் இயற்கை வளத்தையும் இப்பாடலில் அருளினார். உழவர்கள்வயலில் களை எடுக்கிருர்கள்! தாமரைமலர்கள் வயிலில் களையாக இருந்தன; அவற்றையும் களைத்து எறிந்தார்கள். தாமரை மலர்களில் தேன் நிறைந்திருந்தது. களையாகக் களைந்து எறிந்த தாமரை மலர்த்தேன் அருகில் அமைந்த குளங்களை நிரப்பியது. நீரில் கலந்து வளம் கூட்டியது. இது சேக்கிழார் வருணனை — இதனைச் சத்திநாயனுர் புராணத்தோடு ஒப்பிட்டு உள் உறையும் பொருளை விளக்கம் செய்து மகிழ்வித்தார்கள், சத்தியநாயனுர் சிவனடிக்கே ஆளாகிய அன்பர்; சிவனடியார்களைப் பற்றியாரேனும் இகழ்ந்து உரைத்தால் அவர்களின் நாக்கைத் தண்டாயம் (குறடு) என்னும் கருவியினல் இழுத்து, அரிந்தார். இப்பாடலில் உழவர்கள் களையைப் பறித்து எறிந்தனர் எனக் குறித்தது, சத்தியார் (உழவர்) சிவனடியார்களை இகழ்வோரைத் (தாமரை) தண்டித்த பாங்கினைக்குறிப்பது. அடியார்கள் பயிராக இருப்பவர்கள். இகழ்வோர் களையாக இருப்பவர்கள். களையைக் கட்டெறிந்தால் தானே பயிர் வளரும்.

ஓர் ஐயம் எழுந்தது! தாமரை மலர்கள் களைந்து எறியப் பட்டாலும் தேனைச் சொறிந்து குளத்தை நிறைத்தனவே! தண்டிக்கப்பட்டோர் அவ்வகையில் யாது நன்மை செய்தனர் என்பதே அது! ஆம்...... குருமணிகளின் விளக்கம் இதோ!

பெற்றோர்கள் பிள்ளைகளைத் தவறு செய்யும்போது தண்டிக்கிருர்கள்; ஆசிரியர், மாணவர்கள் தவறு செய்யும்போது தண்டிக்கிருர்கள்; - தண்டிக்கும்போதும், தண்டிக்கும்போதும் துன்பம் நேரிட்டாலும் நன்மையே பயனுகிறது! இதுபோலவே சத்தியாரால் தண்டிக்கப் பெற்ற அடியார்கள் தம் தவறு உணர்கிருர்கள்! நம் நன்மைக்கே நாயனுர் இங்ஙனம் செய்தார் எனக் கருதுகிருர்கள்! துன்பம், இன்பத்தை விளைக்கிறது! தாமரையை அறுத்துப் போட்டாலும் சுவாமிக்கே ஆவதுபோல, களமர் அறுத்த தாமரை தேன் பொழிவது போல, சத்தியாரால் தண்டிக்கப் பட்டவர்கள் தவறு நீங்கி இறையடிக்கே ஆளாகி இன்பம் பெற்றனர் – என அரிய விளக்கம் நல்கி ஐயம் தீர்த்து ஆட்கொண்டருளினார்கள்.

மேலும் தண்டிப்போர் உள்ளப்பண்பைப் பொறுத்தே தண்டனை பெறுவோர் திருந்துவதும் அமைந்திருக்கிறது. இத்தண்டனையைத் தொண்டாகச் சென்னியில் ஆற்றையுடை சிவபெருமானின் செந்நெறியைப் பரிவுடன் ஆற்றிவந்தார் என்பார் சேக்கிழார்.

" பன்னெடும் பெருநாள் பரிவாற் செய்து
சென்னி ஆற்றினர் செந்நெறி ஆற்றினர் "

என்பதே சேக்கிழார் திருவாக்கு.

சிவனடியார்களை இகழ்வதால் இகழ்வோர் நரகம் புகுவரே என்ற கருணையினால்தான் நாயனார் அவர்களைத் தண்டித்தார் என்பது பரிவாற் செய்து என்ற தொடரால் இனிது விளங்கும். இக் கருத்தை விளக்கும் நாலடியார் பாடல் ஒன்றையும் அருளி ஒப்பாய்வு செய்தார்கள்.

" தம்மை இகழ்வது தாம்பொறுப்பதன்றி மற்(று)
எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால் - உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவ தூஉம் சான்றோர் கடன் "

என்பது அப்பாடல்.

சேக்கிழார் இவர்தம் செயலை, ஆண்மைத் திருப்பணி என்றும் வீரத்திருத்தொண்டர் என்றும் போற்றியமையை விதந்து குறிப்பிட்டு விளக்கம் செய்தார்கள். சத்தியார் என்னும் பெயர் நாவை அரியும் சத்தியை உடையவர் என்னும் பொருளது. " அன்பரை இகழ்ந்து இயம்பும் உரை வைத்த நாவை வலித்து அரி சத்தியால் சத்தியார் எனும் நாமம் தரித்துளார் " என்னும் சேக்கிழார் வாக்கை அருளி இக்கருத்தை விளக்கம் செய்தார்கள்.

இவர் திருத்தொண்டு உடலால் - செய்யப்பட்ட தொண்டு. மெய்யினால் அமைந்ததொண்டு. சரீரத்தால் செய்யப்படும் சரியைத் தொண்டு. இதனைக் குறிப்பிட்டு, மெய்ம்மை, வாய்மை, உண்மை என்னும் சொற்களின் அமைப்பையும் நினைவுபடுத்தினார்கள். மெய்ம்மை - மெய்யால் உண்மைநெறி பற்றுவது. வாய்மை - வாயால் உண்மை பேசுவது. உண்மை - உள்ளத்தால் உண்மை நினைவது. மனம், வாக்கு, காயம் என்பன திரிகரணங்கள் என்பர். திரிகரணங்களும் இறைவன்பால் ஈடுபடுத்துதற்கு உரியன என நெறிகாட்டியருளினார்கள்.

இங்ஙனம் பல சீரிய சிந்தனைகளை அருளி ஐயடிகள் காடவர்கோன் நாயனார் புராணத்தைத் தொடர்ந்தார்கள் ஐ - தெய்வம் தலைமை முதலிய பல பொருள் உணர்த்தும் ஓரெழுத்தொருசொல். தெய்வத்துக்கு அடிமையாக ஒழுகிய தலைமைப்பாடு உடையவர்; காடவர் - பல்லவரைக் குறிக்கும் சொல். இவரைப் 'பத்திக் கடல் என்று நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியில் குறித்தருளினார்.

இவர் கொடிய வறுமையும், பகையும் நீங்குமாறு அரசு புரிந்தவர். இங்ஙனம் இவர் அரசு புரிதற்கு அவர் மேற்கொண்ட நெறியே காரணம். இதனைச் சேக்கிழார் ''செய்ய சடையார் சைவத் திருநெறியால் அரசளிப்பார்'' என விளக்கிக் கூறியருளியுள்ளார். நீதியால்பகைவரையும் அடிப்படுத்தும் செங்கோல் ஆட்சிசெய்தார். இவர் அரசாட்சிச் சிறப்பை,

" தருமநெறி தழைத்தோங்கத் தாரணிமேல் சைவமுடன்
அருமறையின் துறைவிளங்க அரசளிக்கும் அந்நாளில் "

எனச் சேக்கிழார் ஓதியருளினார். குருமணிகள் இப்பகுதியைத் திருஞானசம்பந்தர் புராணத்தோடு ஒப்பீடு செய்தருளி மகிழ்வித்தார்கள்.

'' வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறைவிளங்க ''

புனிதவாய் மலர்ந்தழுதார் ஞானசம்பந்தர் என்பது அப்பகுதி. வேதநெறி தழைத்தோங்க என முதற்கண் கூறிய அப்பகுதியை இப்புராணப் பாடலில் '' அருமறையின் துறை விளங்க '' என இரண்டாவதாக மொழிந்துள்ளார். மிகு சைவத்துறை விளங்க என ஞானசம்பந்தர் புராணப் பாடலில் இரண்டாவதாகக் கூறப்பெற்ற தொடர்ப் பொருள் '' சைவமுடன் " என முதலாவதாக அமைந்துள்ளது. நுட்பமான இப்பொருட்சிறப்பை மொழிந்தருளிய நுழை புலமாண்பும் ஒப்பீட்டுச் சிறப்பும் நெஞ்சை நிறைவித்தது.

மாற்றரசையும் ஏவல் கொண்டு அரசு புரிந்த ஐயடிகள் 'வடநூல், தென்தமிழ் முதலாம் பன்னுகலைப்பணி செய்யப்' பாரளித்தார். 'அரசாட்சி இன்னல்' எனக் கருதினார்; அதனை வெறுத்தார். அரசுபுரிதல் இன்பம் தருவதன்று என்னும் கருத்தைச் சேரமான் பெருமான் நாயனார் வரலாற்றோடு ஒப்பிட்டுரை செய்தருளினார்கள். சேரமானார் ''உலகின் இயல்பும், அரசு இயல்பும் உறுதி அல்ல'' என உணர்ந்து, தாம் அரசு ஏற்கும் முன் அஞ்சைக் களத்து அப்பர்க்குத் தொண்டு புரிந்தார். அமைச்சர்கள் இவரிடம்

வந்து தொழுது "மாபால் முடிசூடி அருளும்" என வேண்டினர். அதுபோது சேரமானர் "இன்பம் பெருகும் திருத்தொண்டுக்கு இடையூறு இது" எனக் கருதினர். பின் இறையருள் பெற்றுத் திருமுடி தாங்கினர்-சேரமான், அரசு இயல்பு உறுதி அல்ல என்றும் திருத்தொண்டுக்கு இடையூறு என்றும் கருதியமை போலவே ஐயடிகளும் திருத்தொண்டுக்கு அரசாட்சி இடையூறுதரும் எனக்கருதினர். மேலும் சேரன் செங்குட்டுவன் "மழைவளம் கரப்பின் வான் பேரச்சம்; பிழை உயிர் எய்தின் பெரும்பேறச்சம், குடிபுரவுண்டு கொடுங்கோல் அஞ்சி மன்பதைகாக்கும் நன்குடிப்பிறத்தல் துன்பம் அல்லது தொழுந்தகவில்" எனக் கூறியுள்ளமையையும் மேற்கோளாக அருளிச் செய்தார்கள். அரசாட்சி இன்னல் எனக் கருதிய ஐயடிகள் தன்மகனிடத்து ஆட்சி நல்கித் தலங்கள்தோறும் சென்று வழிபட்டார். ஒவ்வொரு தலத்திற்கும் ஒரு வெண்பாப் பாடினர். திருப்பணிகள் செய்தார்; செய்வித்தார். திருச்சிற்றம்பலத்து ஆடல் புரியும் பெருமானைத் தரிசித்துத் திருவெண்பாப் பாடினர். இவர் பாடிய பாடல்களில் இன்று கிடைப்பன 24 பாடல்களே. பதினோராம் திருமுறையில் இவை 'க்ஷேத்திரத் திருவெண்பா' என்ற திருப்பெயருடன் தொகுக்கப்பெற்றுள்ளன. இனியஓசையும் மடக்கணியும் பொருந்தியபாடல்கள் இவை. "இளமையும் செல்வமும் யாக்கையும் நில்லா" என்னும் நெறியை உணர்த்துவன.

மடக்கணி அமைய இவர் பாடிய பாடல்கள் நிலையாமையை விதந்துகூறி நிலையாய் என்றும் விளங்கும் இறைவனைவழிபாடாற்றி உய்க என்னும் குறிப்புடையனவாய் அமைந்துள்ளன.

" குந்தி நடந்து குனிந்தொருகைக் கோலூன்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி — வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை "

என்பதுபோல அமைந்த பாடல்கள் அன்பர்களால் போற்றிப் பாராயணம் செய்யப்படுவன. இங்ஙனம் பல குறிப்புக்களை அருளிய குருமணிகள் ஓர் அரிய செய்தியையும் ஆய்வுப் பொருளாக வைத்தார்கள். இவர் பாடிய தலங்களுள் திருஇடைவாய்த் தலமும் ஒன்று.

" மாண்டுவாய் அங்காவா முன்னம் மடநெஞ்சே!
வேண்டுவாய் ஆகி விரைந்தொல்லைப் — பாண்டவாய்த்
தென்இடைவாய் மேய சிவனார் திருநாமம்
நின்னிடைவாய் வைத்து நினை "

என்பது இடைவாய் க்ஷேத்திரத் திருவெண்பா.

இத்தலத்திற்கு அமைந்த தேவாரம் கல்வெட்டுக்கள் வாயிலாக நாம் அறியவருவது. திருக்கோயிலில் அமைந்த கல்வெட்டுப் படிசெய்யப்பெற்று இதுபோது கிடைத்துள்ளது. இது தேவார அடங்கல்முறையில் தொகுக்கப்படவில்லை. தேவாரப் பாடல்பெற்ற இத்தலம் ஐயடிகள் க்ஷேத்திரத் திருவெண்பாவைப் பெற்றுள்ளது என்பதை இணைத்து நோக்கும்போது, பாடல்பெற்ற தலங்கள் அனைத்தையும் இவர் தரிசித்துத் திருவெண்பாப் பாடினர் எனக் கருத இடம் தருகிறது. ஆய்வுக்கு விருந்தாய் அமைந்த இச்செய்தியையும் அருளி நாயனர் புராண பட்னத்துடன் வரலாறு அருளி அருளுபதேசம் நிறைவித்தார்கள்.

அன்பர்கள் கனிச்சாறு பருகித் தாகசாந்திபெற்றனர். இனிய சிந்தனைகளை ஏந்தியவாறே ஸ்ரீ துர்க்காதேவி ஆலய தரிசனம் செய்துகொண்டு இல்லம் ஏகினர்.

நாயன்மார் வரலாற்றுல் நாமுய்ய வழிகாட்டும்
தூயகுரு அருளிபோற்றித் துதிசெய்து உய்ந்திடுவோம் !

வாழ்க குருமணிகள் !

புகத்தகா இடங்கள்

சூதர் கழகம் அரவம் அருக்களம்
பேதைகள் அல்லார் புகாஅர் புகுவரேல்
ஏதம் பலவும் தரும்.

— ஆசாரக்கோவை.

சூதாடும் இடம், ஆரவாரம் மிகுந்த இடம் ஆகியவற்றில் பேதைகளேபுகுவர். பேதைகள் அல்லார் புகார். அப்படிப் புகுந்தால் அவ்விடங்களால் நமக்குத் துன்பம் உண்டாகும்.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் தேவார வைப்புத்தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்துவிக்கப் பெறுகின்றன. சுக்கில- ஐப்பசி - ஆயில்ய வழிபாடு 23—10—89 திங்கட்கிழமையன்று மாட்டூர் அருள்மிகு சத்தியவாசகர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. இத்தலம் திருஞானசம்பந்தர், சுந்தரர் அருளிய தேவாரத்தில் இடம் பெற்ற சிறப்பினது. தஞ்சை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம் ஆக்கூருக்கு அருகில் உள்ளது. இத்தலச் சிறப்புக்களை விளக்கித் தருமை ஆதீனப்புலவர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., விரிவுரை ஆற்றினார். "மாகுடி, மாட்டூர், கூந்தலூர், புதுக்குடி, தக்களூர் - தேவாரத் திருப்பாடல்களும் தலச்சிறப்புகளும்" என்ற நூல் வெளியிடப் பெற்றது. அன்பர்கள் வழிபாடு ஆற்றிப் பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

ஆங்கில மாத முதல் ஞாயிறு தோறும் தருமை ஆதீனத் திருமடத்தில் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைத் திருக்கூட்டம் சிறப்பாகநடைபெற்று வருகின்றது. இம்மாதம் 100ஆவது அருளுபதேசம் 5—11—89 அன்று திருமுறைப் பாராயணத்துடன் தொடங்கி நடைபெற்றது.

முதலில் தருமைஆதீனப் புலவர், டாக்டர் திரு.கு.சுந்தரமூர்த்தி, எம். ஏ., பிஎச். டி., 'கந்தபுராணத் தத்துவம்' பற்றி உரை நிகழ்த்தினார். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருத்தொண்டர்புராணச்சிந்தனையாகக் கணம்புல்லர் புராணம்உபதேசித்தருளினார்கள். பிறவிக்குக்காரணம் இருவினைகள்; உயிர்கள் நன்மையை அனுபவிக்கவும் பிறவி எடுக்க வேண்டிவரும். ஆதலால் நன்மைபுரியும்போது சிவார்ப்பணமாகச்செய்யவேண்டும்.இங்ஙனம் ஆற்றினால் பிறவி அறும். தீமை புரியவே கூடாது "கணம்புல்லர் தம்திருமுடியை எரிபுருக மடுத்தெரித்தார்-இருவினையின்தொடக்கு எரித்தார்" எனவரும் பெரியபுராணப்பகுதியை இங்ஙனம்சித்தாந்த தத்துவச் நெறியோடு விளக்கம் அருளி உய்வித்தார்கள்.

ஆதீன அடியார்கள், அன்பர்கள், மாணவர்கள், மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத்தினர் முதலியோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். அடுத்து 101 ஆவது அருளுபதேசம் 3—12—89 அன்று நடைபெறும். அன்பர்கள் கலந்து கொண்டு அருள் நலம் பெறுவார்களாக.

கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் குருபூஜை

தருமை ஆதீனத்தைத் தோற்றுவித்தருளிய ஸ்ரீ குருஞான சம்பந்தரின் ஞான ஆசாரியராக விளங்கியவர் கமலை ஸ்ரீ ஞானப் பிரகாசர். சிறந்த ஞானாசாரியரும் நூலாசிரியரும் ஆகிய இவர்கள் முத்திப்பேறு எய்திய நாள் ஐப்பசி - தேய்பிறை - சஷ்டி ஆகும். இவர்களின் குருபூஜை விழா தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின் வண்ணம் சுக்கில ஐப்பசி 4 ஆம் நாள் 20—10—89 வெள்ளிக்கிழமையன்று திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயிலிலும் திருவாரூர்ப் பூங்கோவில் திருச்சுற்றில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தீச்சரத்திலும் காலை விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. திருமுறைக் கலாநிதி திரு. திருஞானசம்பந்த தேசிகர் திருமுறைக்கலாநிதி திரு.கல்யாணசுந்தரதேசிகர் ஆகியோரின் திருமுறைச்சிவபோகசாரம் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் அருள் நூல்கள் பற்றிக் கருத்தரங்கம் நடைபெற்றது. நண்பகல் தருமை ஆதீனம் இராஜன்கட்டளைத் திருமடத்தில் மாகேசுவரபூஜை நடை பெற்றது.

காலை ஸ்ரீ தியாகராசப் பெருமானுக்கு முசுகுந்தார்ச்சனை நடை பெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் வழிபாடாற்றி ஆசியருளி அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின்
பதினெட்டாம் ஆண்டுக் குருபூசை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்தின் 25 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து இருபத்தாறரை ஆண்டுகள் அருளாட்சி செய்தருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பதினெட்டாம் ஆண்டுக் குருபூஜைவிழா 22—10—89 ஞாயிற்றுக்கிழமையன்று குருமூர்த்த ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. காலை, மாலை இருவேளைகளினும் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில்

எழுந்தருளி விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள். காலை வழிபாட்டின் பின்னும், மாலை வழிபாட்டின் முன்னும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய நூல்கள் பற்றிச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

மாலை வழிபாட்டின் பின்னர்த் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் ஆசியுரை வழங்கினார்கள். மகாவித்துவான் சி. அருணைவடிவேல் முதலியார், டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ., பிஎச். டி., மற்றும் கல்லூரி பேராசிரியர்களும், ஆசிரியர்களும் உரையாற்றினர். நண்பகல் மாகேசுவரபூசை நடைபெற்றது. மாலை தருமை ஆதீனம் தேவாரப் பண்ணிசை வகுப்பு மாணவ, மாணவியரால் திருமுறை நாமாவளி பஜனை நிகழ்த்தப்பெற்றது.

இரவு குருமூர்த்த வழிபாட்டின் போது "சைவ அனுட்டான அகவல், சிவபூஜை அகவல்" என்ற நூல் வெளியிடப்பெற்றது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் வழிபாட்டிற் கலந்து கொண்டு பக்தர்கட்கு அருட்பிரசாதம் வழங்கியருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அறக்கட்டளைச் சார்பில்

ஸ்ரீ காசியில் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி முத்திப்பேறு எய்திய காசி குமார சுவாமி மடத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமணியின் திருவுருவப்படத்திற்குச் சிறப்பு வழிபாடும் ஸ்ரீ விசாலாட்சி அம்மை ஸ்ரீ விசுவநாதர் ஸ்ரீ அன்னபூரணி ஸ்ரீ கேதாரநாதர் முதலிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் மாகேசுவர பூசையும் சாதுக்களுக்குப் பண்டாரசவும் சிறப்பாக நடைபெற்றன.

சென்னையில் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள் இறுதியாக வழிபாடாற்றிய சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ கபாலீசுவரர் திருக்கோயில் வழிபாடும் 22—10—89 அன்று சமயப் பிரசார நிலையத்தில் நினைவுச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஞானபீடத்து அமர்ந்த திருநாள்

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் ஞானபீடத்து

அமர்ந்த திருநாள் 25—10—89 புதன்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு ருத்ர அபிஷேகமும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் நடைபெற்றன. திருமுறைகள் பூசிக்கப்பெற்றுப் பாராயணம் செய்யப் பெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்கு திக்குபாலவிஜஸ்நான சாந்தி ஹோமம் நிகழ்வுற்றது. ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலெட்சுமி துர்க்கா பரமேஸ்வரிக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் சந்நிதியில் ஸ்ரீ துர்க்கா சூக்த பாராயணமும் நடைபெற்றன. விழாவிற் கலந்துகொண்ட அன்பர்கட்கு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் அருட்பிரசாதம் வழங்கினார்கள். அன்பர்கள் தரிசனம் செய்து பயனுற்றனர்.

ஸ்ரீ மெய்கண்டதேவர் குருபூஜை விழா

சந்தானகுரவருள் முதல்வராகிய ஸ்ரீ மெய்கண்டதேவர் குருபூஜை விழா ஐப்பசித்திங்கள் கடிய 29—10—89 ஞாயிறன்று தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலும் சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலுக்கு எழுந்தருளி இருவேளைகளிலும் வழிபாடு ஆற்றினார்கள். மாலை 7 மணி அளவில் தருமையில் வித்துவான் திரு. கா. ம. வண்ணப்பன், எம்.ஏ., பி.எட்., ஸ்ரீ மெய்கண்டதேவர் அருள்வரலாறு பற்றி உரையாற்றினார்.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலில் திருமுறைக் கலாநிதி திரு. எம். கனகசபை பிள்ளை திருமுறைப் பண்ணிசை நிகழ்த்தினார். பிர்ம்மஸ்ரீ சி. சிவராஜ தீட்சிதர், தலைமை தாங்கினார். வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., சிவஞான போதம் பற்றி உரையாற்றினார். தருமையிலும், சிதம்பரத்திலும் அன்பர்கள் விழாவில் கலந்து கொண்டு தரிசித்தும் சொற்பொழிவு கேட்டும் பயனடைந்தனர்.

கந்த சஷ்டி விழா

தருமை ஆதினத்தில் :

அருள்மிகு முருகப்பெருமானுக்குரிய திருநாட்களுள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறும் கந்த சஷ்டி விழா 30—10—89 திங்கட்கிழமை முதல் 5—11—89 ஞாயிற்றுக்கிழமை வரை சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. ஆதீனத்தில் ஆன்மார்த்த

மூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் வழிபாட்டுடன் ஸ்ரீ முருகப் பெருமானுக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் சிறப்பு வழிபாடு நிகழ்த்தினர்கள். மாலை 7 மணியளவில், தருமை ஆதீனக் கலைக் கல்லூரி பேராசிரியை வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்., ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூஜை மடத்தில் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தினர். ஆதீன அடியார்களும் அலுவலர்களும் அன்பர்களும் வழிபாடு ஆற்றியும் விரிவுரை கேட்டும் பயன்பெற்றனர்.

ஆதீன தேவஸ்தானங்களில் :

தருமைஆதீனத்திற்குச் சொந்தமான சீகாழி, திருப்பனந்தாள், திருவையாறு, திருபுவனம், திருக்கடவூர், வைத்தீசுவரன்கோயில், மயிலாடுதுறை குமரக்கட்டளை முதலிய தலங்களில் ஸ்ரீ முருகப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடும் கந்தபுராண விரிவுரையும் நிகழ்த்துவிக்கப் பெற்றன.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி திருக்கோயில் ஸ்ரீ திருஞான சம்பந்தசுவாமி திருக்கோயில் சந்நிதியில் டாக்டர் திரு. அ. கலியபெருமாள் எம். ஏ., பிஎச். டி., திருப்பனந்தாள் ஸ்ரீ அருண ஜடேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் புலவர் திரு. கே. கணபதி பி. லிட். பி. எட்., திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி தேவஸ் தானத்தில் வித்துவான் திரு. சுவர்ணகாளீசுவரன், திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரர்சுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான் திரு. சா. முத்துக்கிருஷ்ணன், எம். ஏ., பி. எட்., ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் திரு. தெ. இராஜாமணி எம். ஏ., பிஎஸ். சி., எம். எட்., வைத்தீசுவரன்கோயில் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான் திரு. மு. முருகையா தேசிகர், மயிலாடுதுறை - குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் திரு. இரா. மருதநாயகம், எம். ஏ., எம். ஃபில்., ஆகியோர் உரையாற்றினர். வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கும், திரு மயிலாடுதுறை - குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்கும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் திருவீதியுலாக் காட்சியும் நடைபெற்றன. அன்பர்கள் சுவாமி தரிசனம் செய்து இன்புற்றனர்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(சுக்கிலஞு கார்த்திகைமீ 1உ முதல் 30உ முடிய)
(16—11—89 முதல் 15—12—89 முடிய)

சுக்கிலஞு கார்த்திகைமீ 1உ குருவாரம் திருவாதிரை நக்ஷத்திரம் பவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 20 நாழிகை 24 விநாடிக்கு மீன லக்கினத்தில் ஸ்ரீ உலக ரட்சகராண சூரியபகவான் துலா ராசியிலிருந்து விருச்சிகராசி சங்கிரமணமாகக் கார்த்திகைமாதப் பிரவேசஞ் செய்தருளுகின்றார். அன்றுவிஷ்ணுபதி புண்ணியகாலம். முடவன் முழுக்கு விசேஷம். சங்கிரமணகாலகிரக ஸ்திதியின் பலனாவது உலகில் எங்கும் சுபிட்சம் ஏற்படும். மக்கள் ஆக்கத் தொழில் புரிந்து அதிக செளகரியம் அடைவர். எல்லா அத்தியாவசிய பண்டங்களும் பிரஜைகளின் தேவைக்கு ஏற்ப உற்பத்தி பெருகி வந்துகொண்டிருக்கும். தேசங்களில் ஆன்றோர் களால் சிவபுண்ணிய காரியங்கள் தர்மங்கள் வெகுவாக நடந்து கொண்டிருக்கும். தேசங்களைப் பரிபாலிக்கின்ற மன்னர்கள் ஜனாதிபதிகள் மக்கள் பிரதிநிதிகள் சர்வேஸ்வரனின் சித்தம் நிறைவு செய்பவர்களாகி நீதிபரிபாலனம் செய்வர். மக்கள் பல துறைகளிலும் முன்னேற்றம் அடைவதற்கான திட்டங்கள் வகுத்தும் தேசங்களில் ஆங்காங்குள்ள பிரஜைகளின் குறைதீர்த்தும் துலாக்கோல் நிகர் மனுநீதியாக பரிபாலனம் செய்து பிரஜைகளை இரட்சிப்பர். உலகெங்கும் உள்ளதிருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவனருள் பெற்று சிவராஜயோகத்தில் பிரகாசம்பொருந்தித் திகழ் கின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜகத்குருமகான்கள் லோகம் செவ்விய மார்க்கத்தில் உய்ய உலக நீதி அறவுரைகள் தம் திருவாய் மலர்ந்து விமர்சித்தும் சிவநேயர் கள் சிஷ்யகோடிகள் ராஜபிரமுகர்கள் அனைவருக்கும் மகாபிரசாதம் வழங்கியும் ஆசியருள்வார்கள். அன்னார் திருவுளப்பாங்கின்படி தேசங்களின் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள். சிறப்புப் பூசைகள் நடைபெறும்- லோக சுபிட்சார்த் தத்தை முன்னிட்டும் தேசங்களில் செங்கோல் உயரவும் வழிவழி வந்த சாஸ்திரிகளால் சாஸ்திரோக்தபடி யாகங்கள், யக்ஞங்கள், வேதபாராயணங்கள், ஈஸ்வர தோத்திரங்கள் நடைபெறும். எல்லா மாந்தர்களும் ஈஸ்வரனைத் தரிசித்து மனம் ஒருமைப்பட்டு நல்வழியில் திகழ்வர்;

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼
மேஷராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். இயந்திர சாதனங்களில் அபிவிருத்தி பலன் தரும். வித்துவத்துவம் கலைத்துறையில் புகழ் பரவும். அரசாங்க அனுகூலம் தரும். சிக்கலில் இருந்த காரியம் தெய்வ பலனால் சித்திபெறும். ஓர் புனிதஸ்தலம் செய்தல் ஆகும். புத்திரர்களின் கல்வி கலையில் பிரவிருத்திகளில் உயர் விருத்தி ஏற்படுத்தும். தாம்பத்திய வாழ்வில் பிணக்குவரினும் உடன் சகஜஸ்பம் ஆகும். நவம்பர் 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். டிசம்பர் 7, 8 தேதியில் சுப விஷயங்களில் செலவு செய்தல் ஆகும். வியாழன், வெள்ளி சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½
ரிஷப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம்வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் அரசு நன்மைகள் ஏற்பட்டு பயன் வரும். லிகிதத் தொடர்புகளில் நற்செய்திகள் வந்துகொண்டிருக்கும். எல்லாக் காரியங்களிலும் ஜெயபிராப்தியை யளிக்கும். நல்லோர் பிரபலஸ்தர் அனுகூலம் செய்வர். தாரம் புத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். நவம்பர் 30, டிசம்பர் முதல் தேதிகள் சந்திராஷ்டமம். டிசம்பர் 9, 10 தேதிகளில் செலவினம் ஏற்படும். சனி, ஞாயிறு சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾
மிதுன ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். வித்தியா வியாபாராதி கலைத் துறையில் நற்பலன் வரும். அரசுத் தொடர்பு லிகிதங்களில் நன்மை ஏற்பட்டு வரும். பூமியில் இயந்திர சாதனங்களில் டிசம்பர் 10 தேதிக்குமேல் மிகுந்த பலனையளிக்கும். விவகாரத்தில் ஜெயம் ஏற்படும். தாரம் புத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். டிசம்பர் 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். டிசம்பர் 11, 12 தேதிகளில் நற்செலவு ஆகும். திங்கள், செவ்வாய் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.
கடக ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். பூமியில் இயந்திரசாதனங்களில் டிசம்பர் 11தேதிக்குப்பின்னர் விருத்திபலன் உண்டாகும். முதியவர் அல்லதுமிகவும் தொடர்புடையவர் ஒருவர்மனஸ்தாபத்தில் இருந்து பின் நன்மையில் கூடுவர். வித்துவத்துவம் கலைத்துறையில் புகழ் தரும். மதிநுட்பச்செயல் எல்லாவற்றிலும் நவம்பர் 28தேதி முதலே சிறப்புப் பலனை ஏற்படுத்திவரும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியின் அருளால் எல்லாக்காரியங்களையும் மன உறுதியில் செயல்படுத்தும். தாரம் புத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். டிசம்பர் 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானம் கன்ய ஸ்திதிக்கு ஏற்ப வரவாகிக் கொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் அரசாங்க நன்மைகளை உண்டு பண்ணும். நல்லோர் பிரபலஸ்தர்கள் போற்றுதல் வருகை தருதல் ஆகும். எல்லாக் காரியங்களையும் திடசித்தத்தில் வெற்றிகரமாக நடத்தும். நவீன வாகன பிராப்தியளிக்கும். புத்திரர்களின் கல்வி கலை ஜீவனோபாயத் தொழில்களில் முன்னேற்ற ஸ்திதியாகும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். டிசம்பர் 6, 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் வந்து கொண்டிருக்கும். வித்தியா விநியோகாதிகளில் கலைத்துறையில் நவம்பர் 28 தேதிக்கு ஓர் விசேஷ பலனை உண்டு பண்ணும். உறுதி வாக்களித்தல் ஆகும். யதார்த்தத்தில் முன் விஷயம் வெளிப்படுத்துதலினால் காரியத்தில் தடைவரினும் அரச வெடியில் பூர்த்தியடைதல் ஆகும். ஓர் புனிதஸ்தலம் சென்று வருதல் ஆகும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். டிசம்பர் 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் கணிசமாக வந்து சேரும். வித்துவத்துவம் கலைத்துறையில் அரசு நன்மைகள் ஏற்பட்டு வரும். மரகதம் நீலம் கற்கள் பதித்த ஆபரணம் தரும். ஓர் நவீன இயந்திர சாதனம்கையாளுதல் ஆகும். ஓர் புனிதஸ்தலம் சென்று வரும் பிராப்தியையளிக்கும். எல்லாத்திட்டமிட்டசெயல்களும் காலத்தில் நடந்துகொண்டிருக்கும். தாரம் புத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். டிசம்பர் 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் நல்ல வகையில் வந்துகொண்டிருக்கும். சாஸ்திரம் தெய்வீகம் சம்பந்தமாக உரையாடல், பெரியோர் குருமார்களிடம் ஆசிபெறுதல் ஆகும். நவம்பர் 27 தேதியளவில் எழுத்துமூல விஷயங் களில் அரசாங்கத்திலிருந்து நன்மை ஏற்பட்டு வரும். வீடுவாகன பிராப்தியில் சௌகரியம் இருந்துவரும். எல்லாப்பொதுநலக்காரியங் களும் ஈஸ்வரக் கிருபையில் திருப்திகரமாக நடந்துவரும். தாரம் புத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். நவம்பர் 16, 17 தேதி, டிசம்பர்13, 14 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுச் ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்துநிறையும். அரசுகணியம் விளம்பரம் ஆகியவற்றில் செலவினங்களும் இருந்துவரும். பூமி இயந்திரங்களில் விருத்திபலன் தரும். வாகனசுகம் திருப்தியளிக்கும். நவம்பர் 27 தேதி முதல் முயற்சித்திருந்த எல்லா பிரவிருத்திகளிலும் நற்பலனை உண்டு பண்ணும். புத்திரச் பௌத்திரர்களுக்கு மேன்மை ஏற்படுத்தும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வ பக்தியில் தானதர்மங்களுடன் நடந்துவரும். நவம்பர் 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் அதிகம் தரும். ஸ்திரி வழியினர், புத்திரி இவர்களின் நலனில் செலவினங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் அரசுநன்மைகளை ஏற்படுத்தும். எல்லாத் திட்டமிட்ட காரியங்களும் வெற்றிகரமாக நடந்துவரும். மறைமுக சத்ருக்களின் எதிர்ப்புபலியாது. தாம்பத்தியவாழ்க்கையில் சுமுகம் நிலவும். நவம்பர் 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் வெகுவாக வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் செய்தொழில் உத்தியோகம் ஆகியவற்றில் மேன்மை ஸ்திதியை ஏற்படுத்தும். ஓர் இயந்திர சாதனத்தில் முதலீடு செய்விக்கும். பூமியில் விருத்திபலன் ஏற்படும். வாகன சுகம் திருப்தியளிக்கும். எல்லாக் காரியங்களும் அரசஜெடியில் விரைவாக நடந்து கொண்டிருக்கும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். நவம்பர் 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடந்துவரும். பண வருமானம் வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் நன்மதிப்பு உண்டாகும். நவம்பர் 28 தேதி முதல் ஓர் நவீன பொருள் அனுபோக பிராப்தியாகும். பிரவிருத்தியில் காரியங்கள் தாமதமாக நடப்பினும் ஸ்திரமும் நீடித்த நன்மையிலும் விளங்கும். ஓர் விபத்து சம்பவிக்கும். உடனே கண்டம் தப்பும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். மன அமைதிக்கான நிலைமையை உருவாக்கும். நவம்பர் 25, 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்

இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-V

பாடம் - 9.

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகரின்
திருவருட்பாத் திரட்டுச் சிந்தனை :

பண்டார சாத்திரங்கள் 1

ஆபதோத்தாரணர் மாலை

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ.,
தருமபுரம்.

சிவபெருமான் கொண்டருளியபல்வேறு வடிவங்களை அறுபத்து நான்கு மூர்த்தங்கள் என விரித்தும் இருபத்தைந்து மூர்த்தங்கள் எனத் தொகுத்தும் வழங்குவர் ஆன்றோர். அம்மூர்த்தங்களில் பைரவர், ஆபதோத்தாரணர், வடுகர், க்ஷேத்திரபாலகர், கங்காளர் என்பன சற்றேறுப்ப ஒரே வகையான வடிவங்கள் எனலாம்.

பைரவர் - தேவர்கள் வேண்டுகோட்படி அந்தகாசுரனை அழிக்கச் சிவபெருமான் கொண்டருளிய வடிவம். பைரவர் - பகைவர்க்கு அச்சத்தைத் தருபவர் எனப் பொருள் தரும் பெயராகும்.

ஆபதோத்தாரணர்-சிவபிரான் தேவர்கள் வேண்டிக்கொண்டபடி அவர்கட்கு இடையூறு வரின் அதனைப் போக்கத் திருவுளம் கொண்ட வடிவம். (ஆபத்து-வினைகளையும் வினைப்பயன்களையும் குறிக்கும். உத்தாரணர் - போக்குபவர்.)

வடுகர் - துந்துபி என்போன் மைந்தனாகிய முண்டாசுரன் சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்து வரங்கள் பலபெற்று இந்திரன் நான்முகன் ஆகியோரை எதிர்த்தான். அவர்கள் பெருமானிடம் முறையிட்டனர். பெருமான் தன் ஆற்றலில் ஒரு கூறாய் விளங்கும் வடுகரை ஏவி முண்டாசுரனை அழித்து அவர்கட்கு அருள் செய்தார். அவ்வடிவமே வடுகர் எனப்படுவது.

க்ஷேத்திர பாலகர் - க்ஷேத்திரம் - பூமி. பாலகர் - காப்பவர். ஊழி வெள்ளத்திலிருந்து உலகைக் காத்தருளச் சிவபெருமான் கொண்டருளிய வடிவம் க்ஷேத்திர பாலகர் எனப்பெயர் பெறும்.

கங்காளர் - என்புமாலை அணிந்தவர் என்பது இப்பெயரின் பொருளாகும். அசுரர் குலமன்னனாகிய மாவலியை அழித்து அகந்தையுற்றவராய்த் திரிந்த திருமாலைத் தேவர்கள் வேண்டு கோட்படி சிவபிரான் வச்சிர தண்டத்தால் அழித்து அவர்தோலைச் சட்டையாகவும் முதுகெலும்பைத் தண்டமாகவும் கொண்டருளிய மூர்த்தம் கங்காளர் என்னும் வடிவமாகும்.

சீகாழிப் பதியில் திருத்தோணிமலைச் சிகரத்தின் தென்பால் சட்டைநாதர் என்னும் திருநாமத்தோடுவிளங்கும் இப்பெருமான் மேற்கூறிய மூர்த்தங்களை உள்ளடக்கிய பைரவ மூர்த்தமாக விளங்கி வருபவர்.

பைரவர் எட்டுக் கலைகளாய்த் தோன்றி சுதந்திர பைரவர், சுயேச்சை பைரவர், லோக பைரவர், கால பைரவர், உக்கிர பைரவர், பிச்சையா பைரவர், நிர்மாண பைரவர், பீஷண பைரவர் என்னும் பெயர்களுடன் தெற்குப் பிராகாரத்தில் சட்டைநாதர் சந்நிதியில் வலம்புரி மண்டபத்தில் யோகஸ்தானத் தில் உள்ளார். அஷ்டபைரவர்களுக்கு ஆனந்தர், அசிதாங்கர், குரு, சண்டர், க்ரோதர், உன்மத்தர், கபாலர், பீஷணர் ஆகிய பெயர்களும் கூறப்பெறும்.

பைரவருக்குச் சட்டைநாதர் என்ற திருப்பெயர்வருவதற்குப் பின்வரும் புராண வரலாறு காரணமாகக் கூறப்படுகிறது.

திருமால் மாவலி என்ற அசுரர்குலத் தலைவனிடம் குறள் வடிவாகச்சென்று மூன்றடிமண் யாசித்து விண்ணையும், மண்ணையும் ஈரடியால் அளந்து மூன்றாவது அடியை அவன் தலைமேல் வைத்துப் பாதாள உலகிற்குச்செலுத்தினார். மாவலியைக் கொன்றகொலைப் பழி திருமாலைப் பற்றியது. அதனால் அவர் அகங்காரம் கொண்டு உலகம் நடுங்கத்திரிவாராயினர். இதனை அறிந்த வடுகநாதர் தம் திருக்கரத்தால் திருமாலை மார்பில் அடித்துப் பூமியில்வீழ்த்தினர். திருமகள் தனக்கு மாங்கலியப் பிச்சை வேண்டினர். பெருமான் திருமாலை மீண்டும் உயிர் பெற்றெழச் செய்தருளினர். உயிர் பெற்றெழுந்த திருமால் தனது உடலில் அமைந்த தோலையும் எலும்பையும் அணிந்து கொள்ள வேண்டுமென்று விண்ணப்பிக்க இறைவனும் இசைந்து எலும்பைக் கதையாகவும் தோலைச் சட்டையாகவும் போர்த்திக் கொண்டு திருமாலுக்கு அருள் செய்தார். அதுமுதல் இப்பெருமானுக்குத் தண்டபாணி, சட்டைநாதர், வடுகநாதர், ஆபதுத்தாரணர் கங்காளர் என்னும் பெயர்கள் ஏற்பட்டன எனவும்,

இரணியனது உயிரைக் கவரவந்த நரசிங்கத்தைப் பிளந்து அதன் எலும்பைக் கதையாகவும், தோலைச் சட்டையாகவும் கொண்டவர் ஆதலின் பெருமான் சட்டைநாதர் எனப் பெற்றார் எனவும் புராணங்கள் கூறும்.

துங்க மாமணித் தூணில்வந் திரணியன்
    தோள்வலி தனைவாங்கும்
சிங்க வேற்றரி யரைக்கசைத் தலகெலாம்
    தேர்ந்தனந் தவன்மேனி
அங்கம் யாவுமோர் கதையதாய்க் கொண்டதன்
    அங்கியாப் புனைகாழிச்
சங்க வார்குழைச் சட்டைநா யகன்துணைத்
    தாமரைச் சரண் போற்றி.

எனவரும் பாடலில் இரணியனைக் கொன்று அதனால் இரத்த வெறியுற்ற நரசிங்கத்தை அழித்து அதன் தோலைப் போர்த்திய வரலாறு குறிக்கப்படுகிறது. பைரவ க்ஷேத்திரங்களாக சீகாழி, காசி முதலிய தலங்கள் கூறப்படும்.

சீகாழித் திருத்தலத்தில் விளங்கும்சட்டைநாதர் பலகுடும்பங்களுக்குக் குலதெய்வமாய் விளங்கி வரும் மூர்த்தியாவார். இத்திருக்கோயிற்பெயரே சீகாழி ஸ்ரீசட்டைநாதசுவாமிதேவஸ்தானம் என வழங்கக் காணலாம். மக்கள் பயமும் பக்தியும் கொண்டு இப்பெருமானை வழிபட்டு வருகின்றனர். இவருக்கென உற்சவமூர்த்தியாக விளங்குபவர் ஸ்ரீ முத்துச்சட்டைநாதர் என வழங்கப்பெறுவார். ஆண்டுக்கு ஒருமுறை ஸ்ரீ முத்துச்சட்டைநாதர் புறப்பாடு சிறப்புற இத்தலத்தில் நிகழ்ந்து வருகிறது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுன்னர் அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்ந்து புறப்பாடு நடைபெறும். நடைபாவாடை விரித்து அந்தணர்கள் பலர் தம் தோள்களில் சுவாமியை எழுந்தருளச்செய்துகொண்டு நெய் தீவர்த்திகளுடன் திருக்கோயிற் பிராகாரம் மட்டும் வலம் வந்து சுவாமியை யதாஸ்தானத்தில் எழுந்தருளச் செய்யும் காட்சி இவ் ஆலய விழாக்களில் முக்கியமான ஒரு விழாவாகும்.

சட்டைநாதருக்குப் புனுகுச் சட்டமும் வடைமாலையும் மட்டுமே சார்த்தப் பெறும். அபிஷேகம் முதலியன அவர் சந்நிதியில் கோயில் பிராகாரத்திலுள்ள பலிபீடத்திற்கே செய்விக்கப்படும். வெள்ளிக்கிழமை தோறும் அர்த்தயாமத்தில் சட்டைநாதருக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்கிறது.

சீகாழிச் சட்டைநாதர் மீது தருமை ஆதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள் அருளிச் செய்த நூலே ஆபதுத்தாரணர் மாலையாகும்.

இந்நூல் முப்பது கலித்துறைச் செய்யுட்களால் அமைந்த இனிய பாராயண நூல். நமக்கு ஏற்படும் இன்னல்களை நீக்கி இன்பம் செய்யும் இப்பெருமானது புகழை இந்நூல் அழகுற விரித்துரைத்து நம்மனத்தை அப்பெருமான் திருவடிகளில் ஈடுபடுத்தும் சிறப்புடையது.

காப்புச் செய்யுள் : நூல் ஆசிரியர், கணபதி, கந்தன் ஆகிய இரண்டு தெய்வங்களையும் வேண்டி இந்நூலுக்குக் காப்புச் செய்யுள் யாத்துள்ளார்.

"ஆபதுத்தாரணன் சேய், பன்னூரம் பாடிய யானைக்கு மாமுகன் பாதமும், நீள்கண்ணுறுதிரண்டுள கந்தன் பொற்பாதமும் காப்பாகும்" என சிவபிரான் புகழ்பாடும் இந்நூலுக்கு மூத்த பிள்ளையார், இளையபிள்ளையார் ஆகிய இருவரையும் போற்றுகிறார் ஆசிரியர்.

தெய்வ வழிபாட்டின் பயனையே மக்கள் எதிர் பார்ப்பவர் ஆதலின் இந்நூலாசிரியர் சட்டைநாதரைத் துதித்தால் நமக்கு விளையும் பயன்களைப் பல பாடல்களிலும் தெரிவித்துள்ளார். மேலும் அவரை நாம்வழிபடும்போது வேண்டிக்கொள்ளும் வேண்டு கோள்களையும் தெரிவிக்கின்றார்.

"இன்பம் கொள்ளும்படி அன்பு தந்து என்னை ஆண்டருள்"
(பா - 2)

"என்விதி தவிர்ப்பாய், வாவார உன்னைத் துதிக்க
போர்க்கு வேண்டும் வரம் அளிப்பாய்" (பா - 3)

"மட்டுப்படாத யமதூதர் வந்து வளைத்து
உடலைச் சுட்டுப் பலபொழுது ஆக்குமுன் காத்தருள்" (பா - 5)

"நெறியும் பொறியும் நலமும் மெய்ஞ்ஞானமும்
நீடறிவும் பொறியும் புகழும் கொடுத்தருள்வாய்" (பா - 6)

"நினைத்த கருமம்..................முடித்தருள்வாய் (பா - 7)

"பெருஞ்செல்வமும் முத்தமிழ்க் கல்வியும் கொடுத்து
உண்டிருக்க எனக் கருள்வாய்" (பா - 8)

" ஆரணியத்தில் யான் சென்ற போதும்
இரவில் துயில் போதும் சபையுள் செல்போதும்
துணை யெனக்கு வருவாய் " (பா - 14)

" திசைபிழைத்தாலும் கான் நடந்தாலும்
எவ்விடத்தேனும் இருந்தாலும் என்றன் இடரை
யெல்லாம் தவ்விட நீ வருவாய் " (பா - 20)

" துளுவம் கலிங்கம் தெலுங்கம் மராடம்முதல்
எங்கெங்கும் போக இடர்வரும்போதும் துணைவருவாய் "
(பா - 22)

" மலையாரும் முத்தமிழ்க் கல்வியும் போகமும் காசினியில்
நிலையாகிய பெருஞ்செல்வமும் நீதியும் நீ அருள்வாய் "
(பா - 26)

என்பன முதலிய பாடற்பகுதிகள் சட்டைநாதரிடம் நாம் வேண்டுவனவற்றையும் அவர் நமக்கு அருள்வனவற்றையும் தெரிவிப்பனவாகும். சட்டைநாதரை அன்பொழுக ஆசிரியர் விளக்கும் பெயர்கள் நம் மனத்தை அப்பெருமான் திருவடிகளில் ஈடுபடுத்தும் திறமுடையன. ஒவ்வொரு பாடலும் 'காழி ஆபதுத் தாரணனே' என்ற முடிவுடன் வருகின்றன.

கொன்றைத்தார் கொண்ட வேணியனே, கூற்றுவனைத் தன்னும் பதாம்புயனே, சாயாதகுலதண்டாயுதனே, பச்சைச் சட்டையனே, விண்ணோர் தொழும் மேனியனே, தாயாகிய அப்பனே, இருவர்க் கெட்டா நெட்டையப்பா, சட்டையப்பா, புரம் காய்ந்தவனே, குறியும் குணமும் கடந்தவனே, கன்றுகட்டும் ததிவிற்கண் வந்தவனே, கொன்றை மாலிகை சூடியகண்ணுதலே, தருவேந்திரகையனே, வட்டமதிச் சடையானே, சிரமலையில் அமர்ந்த சட்டம் உடையவனே, சைவாகமப் பொருளே, வாகை சுமைமறிவேணியனே, வடுகா, அடியார் சாலத்தொழும் ஐயனே, பிரமாண்டமெல்லாம் முடிக்கும் தண்டாயுத முகுந்தன் செல்வம் தடுக்கும் தண்டாயுதனே, துட்டவேதாள பூதத்தை ஓட்டு வெட்டுந் தரம்பிடிக்கும் வடுகா, பூதபிசாசுகளைச் சாடும் தண்டா யுதனே, கனல்விழியப் புண்ணியனே, புகலிமலை ஒன்றிய வடுகேச கங்காள வயிரவனே, வான்மதியம் தங்கும் சடாடவியாய், அவுணரைமாட்டி நல்லுதானம் தரும் அண்ணலே, வடுகேசகங்காள வயிரவனே தலைமாலை சூழ்புயனே, பாலனைக் கூர்ந்தவித்துத்தாட் கொண்டு காத்தவனே, எல்லார்க்கும் கதியளிக்கும் சல்லாபம்

ஆனவனே, இளஞ்சந்திரசேகரனே என்பன சட்டைநாதரை விளிக்கும் விளிகளாக உள்ளன.

சட்டைநாதரை வழிபாடு செய்வோர்க்கு எமபயம் இல்லை எனப்பலபாடல்களிலும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். சட்டைநாத மூர்த்தம் இறைவன் கொண்டருளிய வேக வடிவமாதலின் கஜசம்காரமூர்த்தியை வழிபட்ட பயனை இவரை வழிபடுவதாலும் நாம் பெறலாம்.

சிவபிரான் செய்தருளிய அருள் வரலாறுகளாக எமனைப் புறங்கண்டது, (பா - 2, 5, 27,)

திருமால் பிரமர் அடிமுடி காண முடியாத பெருமை கொண்டது, (பா - 4,)

திரிபுரம் எரித்தது, (பா - 6,)

கன்றுகட்டும் தறியில் வந்தது, (பா - 6,)

தாருகாவனத்துப் பிட்சாடனராய்ச் சென்றது, (பா - 9,)

விடமுண்டது, (பா - 15,)

காமனை எரித்தது, (பா - 17,)

திருமாலின் தோலைப் போர்த்தது, (பா - 28, 11, 12,) ஆகியன கூறப்பெற்றுள்ளன.

சட்டைநாதராகிய ஆபதுத்தாரணர் திருவுருவம் வடுகர் கங்காளர் பயிரவர் முதலிய மூர்த்தங்களை உள்ளடக்கியது என்பதை பா - 4, 18, 26 ஆகியன வற்றாலும் இத்தலத்தில் இம்மூர்த்திக்குச் செய்யப்படும் அருச்சனையாலும் நாம் உணரலாம்.

சட்டைநாதருக்குப் புனுகு அணிந்து வழிபடும் குறிப்பு பா-2, 6, 8, ஆகியவற்றால் குறிக்கப்படுகின்றன.

சீகாழித் திருத்தோணிமலையில் அவர் இடம் கொண்டருளிய சிறப்பு பா-8, 15, 18, 26 ஆகியவற்றால் உணர்த்தப்பெறுகின்றன.

சட்டைநாதரின் தண்டாயுதம் நம்மைக்காத்தருளக்கொண்ட ஆயுதம் என்பதை, பா - 1, 7, 11, 12, 13, 15, 16, 17, 21, 24 ஆகிய வற்றால் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டைநாதனின் திருவுருவத்தை நெஞ்சில் நிறுத்தும் திருப்பாடல்களாக பா - 1, 11, ஆகியன விளங்குகின்றன.

இந்நூலைப் பாராயணம் செய்து வழிபடுவோர் அச்சம் இன்றி எல்லா நலன்களும் பெற்று இனிது வாழ்வர். மனப்பாடம் செய்து கொள்ளுதற்குச் சில பாடல்கள் இங்குக் குறிக்கப் படுகின்றன.

ஆபதுத்தாரணர் மாலை :

சீர்கொண்ட செம்பொற் றிருமேனி யுஞ்செம் முகமலருங்
கார்கொண்ட சட்டையுந் தண்டாயுதமுங் கணங்களெட்டுங்
கூர்கொண்ட மூவிலைச் சூலமுங் கொண்டருள் கூர்ந்தகொன்றைத்
தார்கொண்ட வேணிய னேகாழி யாபதுத் தாரணனே.

தெள்ளும் புழுகும் பனிநீருங் குங்குமச் சேறுஞ்செந்தேன்
விள்ளும் மலருநின் பாதத்திற் சாத்தி விடாமலின்பங்
கொள்ளும் படியன்பு தந்தெனை யாண்டருள் கூற்றுவனைத்
தள்ளும் பதாம்புய னேகாழி யாபதுத் தாரணனே.

சாயாத சூலதண் டாயுதனே பச்சைச் சட்டையனே
வேயார்வின் ஞோர்தொழும் மேனியனே என் மிடிதவிர்ப்பாய்
வாயார உன்னைத் துதிப்போர்க்கு வேண்டும் வரம் அளிப்பாய்
தாயாகிய அப்பனே காழி ஆபதுத் தாரணனே.

வட்டையொப் பாகு மினியசொல் மாதர் மயக்கத்திலே
பட்டையப் பாமிக யானினைத் தேன்பண் டிருவர்க்கெட்டா
நெட்டையப் பாமறை காணாத சேவடி நீயருள்வாய்
சட்டையப் பாவடு காகாழி யாபதுத் தாரணனே.

மட்டுப் படாத யமதூதர் வந்து வளைத்துடலைச்
சுட்டுப் பலபொடி யாக்குமுன் காத்தருள் தோடணிந்த
பட்டுப் புயத்தினுந் தண்டா யுதத்தினும் பாதத்தினுந்
தட்டுப் புழுகணி யுங்காழி யாபதுத் தாரணனே.

நெறியும் பொறியுந் தவமுமெய்ஞ் ஞானமும் நீடறிவும்
பொறியும் புகழுங் கொடுத்தருள் வாய்புரங் காய்ந்தவனே
குறியுங் குணமுங் கடந்தவ னேகுழக் கன்றுகட்டுந்
தறியின்கண் வந்தவ னேகாழி யாபதுத் தாரணனே.

அடியார் மனத்தில் நினைத்த கருமம் அனைத்து மங்கே
முடியாத தேது முடித்தருள் வாய்முரு காரலங்கல்
கடியார் மலர்க்கொன்றை மாலிகை சூடிய கண்ணுதலே
தடியேந்திய கையனே காழி ஆபதுத் தாரணனே.

முட்டற வாழும் பெருஞ்செல்வ மும்முத் தமிழ்க்கல்வியும்
எட்டுணை யேனுங் கொடுத்துண் டிருக்க வெனக்கருள்வாய்
வட்ட மதிச்சடை யானே சிகர மலைக்கமர்ந்த
சட்ட முடையவ னேகாழி யாபதுத் தாரணனே.

பொய்யா லியபுவி வாழ்க்கைக் கடலிற் புகுந்தழுந்தி
மெய்யா மிதுவென நம்பிவிட் டேன்வினை யேனைக்கண்பாரீ
மையாடு கண்ணியர் பின்செலத் தாரு வனத்திற்சென்ற
சைவா கமப்பொரு ளேகாழி யாபதுத் தாரணனே.

நீலக் கயல்விழி மாதர் கலவியில் நேசம்வைத்தே
ஆலைக் கரும்பது போல விடாதுன் னருள்புரிவாய்
வாலைக் கலைமதி வேணிய னேவடுகா வடியார்
சாலத் தொழுமையனே காழி யாபதுத் தாரணனே.

செந்தமி ழோர்தொழுந் தண்டா யுதமுந் திருவழகும்
சுந்தர முப்பச்சைக் கஞ்சுகந் தானுங் கருதவிவ
இந்தணி வட்டச் சடையுங்கண் மூன்று மிருபதமுஞ்
சிந்தத முமற வேன்காழி யாபதுத் தாரணனே.

வடிக்குந்தண் டாயுத மென்பார்க்கு நோய்வினை பற்றறுப்பப்
பிடிக்குந்தண் டாயுத வெண்ணருங் கோடிப்ர மாண்டமெல்லாம்
முடிக்குந்தண் டாயுதமும் முதண்டந் தாண்டு முகுந்தன் சென்னி
தடிக்குந்தண் டாயுத னேகாழி யாபதுத் தாரணனே.

அரம்பிடிக்கும் கண்ணி னராசை மேற்கொண்டலைவ தெல்லாம்
வரம்பிடிக்கும் கருத்துண்மை கண்டார்க் கில்லைவந் தருள்கூர்
உரம்பிடிக் குந்துட்ட வேதாள பூதத்தை யோட்டிவெட்டித்
தரம்பிடிக் கும்வடு காகாழி யாபதுத் தாரணனே.

பெருகா ரணியத்திலி யான்சென்ற போதும் பெரும் பொருளால்
வருகாதல் கொண்டிர விற்றுயில் போதுமிம் மண்டலத்தில்
அருவா தியர்கள் சபையிற்செல் போதுந் துணையெனக்கு
வருவா யுனைநம்பி னேன்காழி யாபதுத் தாரணனே.

செம்மலை மீதினிற் சாமள கஞ்சுகஞ் சேர்வடிவும்
அம்மலை போலுநற் றண்டா யுதமுங்கொண் டன்புடனே
எம்மலை வேதந் தவிர்த்தருள் வாய்கடு வேந்தி விண்ணோர்
தம்மலை வோட்டுந் தமிழ்க்காழி யாபதுத் தாரணனே.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

48 ஆம் ஆண்டு மலர்ப் பொருளடக்கம்

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
1	அதிபத்தர்	481
2	அப்பருக்கோர் அணிவிழாக் காண்போம்	225
3	அப்பர் வழங்கிய ஆன்மீகச் செல்வம்	25
4	அரசு ஊழியர்களின் சிந்தனைக்கு	337
5	ஆலயம் அறநிலையங்களுக்குத் தன்னாட்சி வாரியம்	169
6	ஆறுகளை நாட்டுடைமை ஆக்குக	515
7	இடபாரூடமூர்த்தி	472
8	இதழ்வழிச் சைவ சமயக்கல்வி	49, 105, 161, 217, 273, 329, 385, 441, 497, 553, 649
9	இலிங்கபுராணத் தேவர்	587, 617
10	இறை உணர்வு	364
11	எதிர்காலம்	44, 100, 156, 213 268, 325, 381, 437, 493, 549, 597, 645
12	ஏழை என்பார் யார்?	393
13	கடிதம்	24, 28, 43, 48, 72, 200, 237, 239, 313, 318, 324, 429, 476, 528
14	கணநாத நாயனார்	258
15	கர்நாடக இசையில் யமகம்	186, 241, 29

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
16	கலிக்கம்பர்	539
17	கலிய நாயனார்	573
18	கலைஞர் ஆட்சி கருணையுடன் பொலிக !	113
19	கழறிற்றறிவார்	83, 148, 204
20	குமரகுருபரர் பிரபந்தங்களில் பசு	137
21	குமரகுருபரரும் வேமனரும்	409
22	குருபூஜை விழா - திருநாள் விபரம்	240
23	குருமூர்த்த ஆலயங்களின் கும்பாபிஷேக விழா அழைப்பு	57
24	குருமூர்த்தக் கோயில்களின் குடமுழுக்குப் பெருவிழா	1, 127
25	கூற்றுவ நாயனார்	314
26	சத்தியார், ஐயடிகள் காடவர்கோன்	634
27	சித்தர்க்காடு - விளநகர் ஸ்ரீ சம்பந்தர் கோயில்களின் சிலகல்வெட்டுக்கள்	192
28	சுக்கில ஆண்டிற் சுகம்	185
29	செய்திகள்	41, 98, 152, 209, 261, 319, 375, 435, 488, 546, 593, 640
30	சைவ உணவு உண்பவர்களுக்குப் பொறுமை, ஆயுள் அதிகம்	238
31	சைவ சித்தாந்தக் கருத்தரங்கம்	73
32	சைவ சித்தாந்த வரலாறு	246, 301
33	ஞானசம்பந்தம் 47 ஆண்டு மலர்ப் பொருளடக்கம் (இதழ் - 1)	i - iv
34	ஞானாமிர்தத்தில் உவமை நயம்	353
35	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	9, 69, 118, 175, 230, 286, 342, 399, 456, 510, 566, 606

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
36	திரிபுராந்தகமூர்த்தி	537
37	திருக்கைக் கோட்டி	465
38	திருத்தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் பெருவிழா அழைப்பிதழ் (இதழ் - 6)	1-16
39	திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு அழைப்பிதழ்	64
40	திருமுல்லைவாயில் திருக்குடமுழுக்குக் காணவாரீர்	449
41	திருமுறை ஓதுவார்க்குத் திருமலைமன்னர் தந்த செப்புப் பட்டயம்	252
42	திருமூலரின் பொருளாதாரத் சமத்துவச் சிந்தனைகள்	142
43	தீர்த்தாண்டதானபுரக் கல்வெட்டு	543
44	தேசநலத்திற்குத் தேவி வழிபாடு	505
45	தேர்தல் சிந்தனையும் பிரார்த்தனையும்	601
46	தேவர் – சொற்பொருள் விளக்கம்	309
47	தேவாரம் – சொல்வழக்கு	464
48	நந்தி திருவவதாரம்	182
49	நாட்டம் அதுவாய் நட	212
50	நாற்பத்தெட்டில் நலமே வாழி	16
51	நீர்க்கடன்	84
52	' பஞ்சாக்கரை ' – வைப்புத்தலம்	358
53	பத்துக் கட்டளைகள்	572
54	பார்வதி திருமணம்	17
55	பார்வையாளர் குறிப்பு நகல்	136, 147, 203, 212, 466, 473, 579, 616
56	பாலொத்த மென்மொழியாளும் உமைதனையும்	29
57	பித்தா ... ... !	292
58	புகழ்ச்சோழர், நரசிங்க முனையரையர்	430

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
59	புனிதா ! நீ வாழ்க	92
60	போதமும் சித்தியும்	22, 124, 179, 234, 311, 367, 406, 474, 531, 577, 625
61	பொய்யடிமை இல்லாத புலவர்	370
62	பொறியியலும் ஆன்மீகமும்	129
63	மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்	20[illegible], 255, 306, 360, 426, 477, 534, 580, 622
64	மதிப்புரை	48, 97, 487
65	மேலைநாட்டுத் தத்துவ மேதைகள்	88, 93, 142, 196, 347, 422, 467, 521, 628
66	யார் பெரியர்?	526
67	வரவேற்புக் கவிதை	462
68	வானங்கரசன் பெய்த மழை	419
69	விதியும் மதியும்	583
70	விஷ்ணு பக்தி	13, 79
71	வீட்டிலிருக்கும் பெண்கள்	415
72	ஸ்ரீ உமாபதி மூர்த்தி	570
73	ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசர், ஸ்ரீ கயிலைக் குருமணி குருபூஜைப் பெருவிழா	561
74	ஸ்ரீ கல்யாண சுந்தரமூர்த்தி	434
75	ஸ்ரீ சந்திரசேகரமூர்த்தி	296
76	ஸ்ரீ சொக்கநாதர் திருமண மண்டபம்	517
77	ஸ்ரீ சொக்கலிங்கமும் ஸ்ரீ குமரகுருபரரும்	262
78	ஜவகர்லால் நேரு	485
79	Gnanasambandam Magazine (Form - iv)	160

உ
சிவமயம்

கார்த்திகை மாதச் சிறப்பு நாட்கள்

16—11—89 வியாழன், விஷ்ணுபதி புண்யகாலம். முடவன் முழுக்கு. திருவையாறு மாதப் பிறப்பு தீர்த்தம். விருச்சிகரவி 20-24. சங்கடஹர சதுர்த்தி. கரிநாள்.

17—11—89 வெள்ளி, திருப்பனந்தாள் ஸ்ரீ பிருகந்தநாயகி அம்மன் தீர்த்தம்.

19—11—89 ஞாயிறு, கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீபஞ்சமூர்த்திகளும், காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளுதல். ஆயில்யவிழா.

20—11—89 திங்கள், மஹாதேவாஷ்டமி, திருப்பனந்தாள், திருக்கடவூர் 1008 சங்காபிஷேகம்.

22—11—89 புதன், மெய்ப்பொருள் நாயனார் குருபூஜை.

23—11—89 வியாழன், ஆனாய நாயனார் குருபூஜை.

25—11—89 சனி, மஹாபிரதோஷம். கரிநாள்.

26—11—89 ஞாயிறு, மாதசிவராத்திரி.

27—11—89 திங்கள், போதாயன அமாவாசை.

28—11—89 செவ்வாய், சர்வ அமாவாசை, திருவிசைநல்லூர் கங்காகர்ஷணம்.

30—11—89 வியாழன், மூர்க்க நாயனார் குருபூஜை.

1—12—89 வெள்ளி, சிறப்புலி நாயனார் குருபூஜை.

2—12—89 சனி, சதுர்த்தி விரதம். கரிநாள்.

3—12—89 ஞாயிறு, சிரவணவிரதம்.

4—12—89 திங்கள், சஷ்டிவிரதம்.

10—12—89 ஞாயிறு, பிரதோஷம், பரணி தீபம்.

11—12—89 திங்கள், கிருத்திகை விரதம், சோமவார் கிருத்திகை, தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம், மலைக்கார்த்திகை அண்ணாமலை தீபம், கணம்புல்லர் குருபூஜை

12—12—89 செவ்வாய், பௌர்ணமி விரத பூசையில் அக்னி மாலை சாத்துதல், பொறி நைவேத்தியம், திருச்சுடர் அபிஷேகம், வைகானஸ பாஞ்சராத்ர சர்வாலய தீபம். தத்தாத்ரேய ஜெயந்தி.

14—12—89 வியாழன், மயிலாடுதுறை வள்ளலார்கோயில் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்திக்கு விசேஷ அபிஷேக ஆராதனை.

15—12—89 வெள்ளி, குத்தாலம் கடைவெள்ளி ஸ்தலவிருக்ஷ பூசை, சங்கடஹரசதுர்த்தி, சாபரவி 50-48.

GNANASAMBANDAM

Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M. 4

உ

குருபாதம்

தருமை ஆதீனம்

ஞானசம்பந்தம் பதிப்பக வெளியீடு

சைவ அநுட்டான அகவல்

சிவபூஜை அகவல்

திருத்தருமை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞான சம்பந்தரின் ஞான ஆசாரியர் கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர். இவர்கள் அருளிய இவ்விரு அரிய நூல்களும் தருமை ஆதீனம் 25 ஆவ்து குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளின் 18 ஆம் ஆண்டுக் குருபூஜை விழாமலராக வெளியிடப்பெற்றுள்ளது. சைவ சமயிகள் உரிய பருவங்களில் மேற்கொள்ளத்தக்க சமய ஒழுக்கங்களாகிய சைவ அநுட்டானம், சிவபூஜை ஆகியவற்றை விளக்கும் இனிய நூல்கள் இவை. சிவபூஜை அகவலின் அங்கமாக சூரிய பூசையை விளக்கும் அகவலும் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. பயனுள்ள இந்நூலை அன்பர்கள் பெற்று ஓதி - ஒழுகி நலம் பல பெறலாம்.

அளவு : டபிள் கிரவுன் 1×16. பக்கங்கள் 42.

அடக்க விலை .... ரூ. 2—00.

அஞ்சல் செலவு (நூல் அஞ்சல்) ரூ. 0—50.

கிடைக்குமிடம் :—

செயலாளர்,

ஞானசம்பந்தம் பதிப்பகம்,

தருமை ஆதீனம்,

தருமபுரம், மயிலாடுதுறை 609 001.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram, at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-11-89.